கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

28-4-1974

40 காசு



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள். தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு செலவில் இருபங்கு ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்

— பாரதியார்

கோகுலம்

மலர் 3 ☐ இதழ் 2

ஏப்ரல் 28, 1974
ஆனந்த, சித்திரை 15

☐

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 10-00
ஆறு மாதம்	ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

☐

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டையில்:

போட்டிலேறிக் குந்திவிட்டாப்
போகத் தெரிய வேணுமா?
மாட்டிக் கிட்டு நடுவிலே
மலங்க மலங்க விழிக்கலாமா?

வண்ணப்படம்:
எஸ். அஸத்

துண்டி விநாயகரது பெருமை

கீர்த்தி என்ற அம்மாதரசி கிருத்சமத முனிவரைத் தொழுது, ''குருநாதா! என் மகன் எக்காலமும் இடையூறுகள் இன்றி எல்லா உலகங்களும் இவனுடைய ஆணை வழி நிற்க அரசு புரிய வேண்டும். அத்தகு வித்தக நலம் உண்டாக இவனுக்கு விநாயகருடைய திருமந்திரத்தை உபதேசித்தருளவேண்டும்'' என்று வேண்டினாள்.

கிருத்சமதர் க்ஷிப்ரபிரசாதனுக்கு விநாயகருடைய நாலெழுத்தாலான மந்திரத்தை உபதேசித்தார்.

''அம்மா நீ உன் மகனுடன் காசிக்குச் சென்று அங்குள்ள துண்டி விநாயகருடைய சந்நிதியில் இம்மந்திரத்தை உருவேற்றினால் உயர்ந்த பயன் உண்டாகும். எல்லாத் தலங்களிலும் காசி சிறந்தது. அது இணையற்ற திருத்தலம். காசியில் இறப்பவர்களுக்குச் சிவபெருமான் வலக் காதில் ஓம் என்ற தாரக மந்திரத்தை உபதேசித்து சிவசாருபமூர்த்தியைத் தருகின்றார். தேவரும் மூவரும் வழிபட்ட தலம் காசி. திருமால் அங்கு ஆழமான திருக்குளத்தை உண்டாக்கி அத்தீர்த்தத்தால் விசுவநாதரை வழிபட்டு அக்குளக்கரையில் மாதவஞ் செய்தார். மாதவருடைய மாதவத்துக்கு அருள்புரிந்த மகாதேவர் அவர் முன் தோன்றிச் சிறிது தலையை அசைத்தார். இறைவருடைய செவியில் உள்ள நாக குண்டலத்தில் உள்ள ஒரு மணி அக்குளத்தில் வீழ்ந்தது. அதனால் அப்பொய்கை 'மணி கர்ணிகை' என்று பேர் பெற்றது.

''பிறகு பகீரதன் தவம் செய்து கங்கையைக் கொணர்ந்தான். அக்குளத்தில் கங்கையும் கலந்தது. அம் மணிகர்ணிகையில் முழுகினால் முழுகினோருடைய பாவங்களனைத்தும் பரிதி முன் பனி போல் பறந்தோடும். ஆதலால் நீ உன் மகனுடன் காசியை அடைந்து, மணிகர்ணிகையிலும் கங்கையிலும் நீராடி, அசுவநாதர் சந்நிதியில் எழுந்தருளியுள்ள துண்டி விநாயகரை அறுகு, வன்னி, மந்தாரைகளால் அர்ச்சித்து வழிபடுவாயாக'' என்று கூறினார்.

கீர்த்தி தன் கணவனரிடம் விடை பெற்று, மகனுடன் காசிப் பதியை அடைந்தாள். துண்டி விநாயகர் திருமுன் மகனுடன் தானும் தவஞ் செய்தாள். மாசி மாதம் அமர பட்சம் சதுர்த்தசியன்று அதிகாலையில் எழுந்து நீராடி விநாயகருடைய நாலெழுத்து மந்திரத்தை உச்சரித்து வன்னி மரத்தடியில் தியானம் செய்தாள். சந்திரன் உதித்தவுடன் வன்னி, அறுகு, மந்தாரம் இவைகளால் துண்டி விநாயகரை அர்ச்சித்து ஆராதனை செய்தார்கள்.


விநாயகர் சிங்க வாகனத்தில் ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக் கரங்களும் உடையவராய்க் காட்சி தந்தார்.

கீர்த்தியும் க்ஷிப்ரபிரசாதனும் தணியாத அன்புடன் தண்ணருட் கடலாகிய விநாயகருடைய வேதங்களுக்கும் எட்டாத பாதங்களில் பலமுறை பணிந்தார்கள்.

கீர்த்தி, ''தேவ தேவா! மூவர்க்கும் முத்தொழில்களைத் தந்த முழுமுதற் கடவுளே! என் புதல்வனுக்கு நீண்ட ஆயுளும், கலைச் செல்வமும், எல்லோருக்கும் தலைமை பூண்டு அரசு புரியும் ஆட்சிப் பேறும் வழங்குதல் வேண்டும்'' என்று தொழுது நின்றாள்.

ஆனை முகத்தண்ணல், ''அன்பிற் சிறந்தவளே! உன் மகன் ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிவான். ஆயிரம் வேள்விகள் புரிவான்; இறுதியில் மெய்

பிள்ளையார்





பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்

ஞானம் பெற்று வீடு பேறடைவான்'' என்று கூறி அவன் கையில் தமது பரசு என்ற ஆயுதத்தைத் தந்து, ''பரசு பாணி'' என்ற பேரும் சீரும் தந்து மறைந்தருளினார்.

மறுநாள் காலை கீர்த்தியும் ஷிப்பி ரப்பிரசாதனும் கங்கையில் முழுகி, துண்டி விநாயகருடைய கருணை வெள்ளத்திலும் முழுகிப் பிரியா விடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

பிரிய விரதன் இவர்களின் வரவை உணர்ந்து, அமைச்சரை அனுப்பி மேள தாளங்களுடன் வரவேற்பு செய்தான். கீர்த்தியும் ஷிப்பிரபிரசாதனும் பிரிய விரதனைப் பணிந்தார்கள். பிரிய விரதன் மகனைத் தழுவிப் பேரானந்தமடைந்தான். நடந்த அனைத்தும் கேட்டு உள்ளம் உவந்தான்.

நல்ல நாளில் பிரிய விரதன் தன் மகனாகிய ஷிப்பிரபிரசாதனுக்கு முடி சூட்டினான். சில நாட்களுக்குப் பிறகு பிரயவிரதனின் மனது முக்தி மார்க்கத்தை நாடியது. வானப் பிரஸ்தாஸ்ரமத்தை ஏற்க முடிவு செய்து, அதன் படியே கானகஞ் சென்று போனகந் துறந்து வானகம் புக்கான்.

ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட ஷிப்பிரபிரசாதன் ஒளி வீசுகின்ற இரத்தின மணியால் விநாயகருடைய திருவுருவை அமைத்து அதனைக் கழுத்தில் அணிந்து கொண்டான்.

ஆயிரம் வேள்விகள் புரிந்தான். ஆயிரம் ஆயிரமாகப் பொற்காசுகளை வழங்கினான். ஆயிரம் ஆண்டுகள் அரசு புரிந்தான்.

விநாயகர் திருவருளால் தெய்வ விமானம் வந்தது. அதில் ஏறி விநாயக உலகம் சென்று விநாயகருடைய பேரின்ப நலனைப் பெற்றான் ஷிப்பிரப் பிரசாதன்.



வீனஸ் கிரகம் — பூமியின் மர்மமான சகோதரி



அதிகாலையில் சூரியோதயத்துக்கு முன்னறிவிப்பாக; 'பொழுது புலரப் போகிறது, ஆதவன் தோன்றப் போகிறான்' என்பதைக் கட்டியம் கூறிக் கொண்டு ஒரு நட்சத்திரம் கிழக்கு வானிலே மினுக்கும். 'வெள்ளிமுளைத்து விட்டது' என்று நம் பெரியவர்கள் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். வெள்ளிக்கிழமையைச் சுக்கிர வாரம் என்பார்கள். இந்த வெள்ளி ஒரு கிரகம். ரோமானியர்கள் இதை வீனஸ் என்று அழைத்தார்கள். நாம் இதைச் சுக்கிரன் என்கிறோம். புராதன கிரேக்கர்கள் அதிகாலையிலும் மாலையிலும் பிரகாசமான ஒரு நட்சத்திரம் வானத்திலே ஒளி விடுவதைக் கண்டார்கள். கி. மு. 500ம் ஆண்டுக்கு முன்பு வரை கிரேக்க வான சாஸ்திரிகள் காலையில் தோன்றும் நட்சத்திரத்தை ஹெஸ்பரஸ் (Hesperus) என்றும் மாலையில் காணும் நட்சத்திரத்துக்குப் பாஸ்பரஸ் (Phosphorous) என்றும் பெயரிட்டார்கள். பிறகு கிரேக்க கணித மேதையான பிதாகரஸ் என்பவர் இவ்விரு நட்சத்திரங்கள் வெவ்வேறல்ல ஒன்றுதான் என்பதைக் கண்டு அறிவித்தார். அன்பு, அழகு, கம்பீரம், செழுமை இவைகளின் பிரதிநிதியான கிரேக்கப் பெண் கடவுளின் பெயர் அஃப்ரோடைட் (Aphrodite). இதற்கு இதே பொருளைத் தரும் ரோமானியப் பெயர்தான் வீனஸ். அழகிய ஒளிமிக்க ஒரு நட்சத்திரத்துக்கு ஏற்ற பெயர்தான். அதே மாதிரி இவ்வழகி தன்னிடமுள்ள பல ரகசியங்களை இன்னும் நமக்குக் காட்டாமல் மர்ம மங்கையாகவே விளங்குகிறாள்.


இருபத்திரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதும், இரண்டு கைகளையும் இழந்த நிலையிலும் அழகும் கம்பீரமுமிக்கதாக உலகிலேயே ஒப்பற்ற கலையழகு கொண்ட சிலையாகக் கருதப்படுகிறது மிலோவில் உள்ள வீனஸ் அழகியின் சிலை. வீனஸ் என்ற அழகியின் பெயரைக் கொண்ட இந்தக் கிரகத்தின் குறுக்களவு 7,700 மைல்கள். இதற்குச் சந்திரன்கள் கிடையாது. கிட்டத்தட்ட பூமியைப் போலவேயும் பூமிக்கு அருகாமையிலும் உள்ள கிரகம் வீனஸ். சூரியப் பாதையில் மெர்க்குரிக்கு அடுத்தபடியாகச் சூரியனுக்கு அருகில் இருப்பது. சூரியனிடமிருந்து இது 67 மில்லியன் மைல்கள் தூரத்தில் இருக்கிறது. சூரியனை ஒரு தடவை சுற்றி வரச் சுக்கிரனுக்கு 225 நாட்கள் ஆகின்றன. அது தன்னைத் தானே தன் இருசில் சுற்றிக் கொள்ள எத்தனை நாட்கள் ஆகின்றன என்பது இன்னும் புரியாத மர்மமாகவே உள்ளது.

இந்தக் கிரகத்தைப் பற்றி வானியல் வல்லுநர்கள் அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணம், மிகப் பெரிய தூரதரிசினியின் மூலமாகக்கூட இந்தக் கிரகத்தின் மேல் பரப்பைக் காண முடியாதது தான். இரவு வேளையில் கருநீல வானத்தில் தகதகத்தபடி மினுக்கிடும் இந்த நட்சத்திரத்தைச் சாதாரணக் கண்களாலேயே காண முடியும்போது வான சாஸ்திரிகளால் இதை ஏன் ஆராய முடியவில்லை என்று கேட்கத் தோன்றும். கிரகங்களிலேயே மிகமிகப் பிரகாசமானது வீனஸ் எனப்படும் சுக்கிரன்தான். நட்சத்திரங்களில் மிகப்

பிரகாசமுடையது சிரியஸ் (Sirius) என்ற நட்சத்திரம். இந்த ஒளிமிக்க சிரியஸையும்விடப் பதின்மடங்கு ஒளியுடையது வீனஸ். ஜுபிடர் கிரகத்தைவிட ஆறு மடங்கு ஒளியுடையது. இத்தனை ஒளியுடையதாக இருப்பதினால்தான் இதை ஆராய்வது கடினமாக இருக்கிறது. இக்கிரகத்தின் மீது விழும் சூரிய ஒளியில் அறுபது சதவிகித ஒளியை இது பிரதிபலிக்கச் செய்கிறது. நடுப் பகலில் கூட இக்கிரகத்தைக் காணலாம். தூரதரிசினிமூலம் இக்கிரகத்தைக் காணும்போது பளீரென்ற ஒரு தட்டைப் போலத்தான் தோன்றும். இதன் மேல் பரப்புத் தெரியாது. காரணம், இந்தக் கிரகத்தைச் சுற்றிக் கனமான ஒருவித வாயு மேகப் படலமாகச் சூழ்ந்துள்ளது. இந்த மேகப் படலத்தில் பட்டுப் பிரதிபலிக்கும் சூரிய ஒளியினால்தான், இக்கிரகத்தை இருண்ட வானில் நம்மால் காண முடிகிறது. இக்கிரகத்தின்மீது மூடியுள்ள வாயு மண்டலத்தின் மேற்பரப்பைத்தான் வானியல் அறிஞர்கள் காண முடிகிறது; கனத்த மூடுபனியினூடே ஒரு நகரத்தின் காட்சியைக் காணுவது போல.

ஒளியைப் பிரித்துப் பாகுபடுத்தி அதில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்பதைக் கூறும் ஒரு கருவி ஸ்பெக்ட்ராஸ்கோப். இதன் உதவியால் வீனஸை ஆராய்ந்ததில் இதன் மேற்பரப்பில் மூடியிருப்பது கரியமில வாயு என்பது தெளிவாயிற்று. கொஞ்சம் நீராவியும் இருக்கலாமாம். இந்த மேக மண்டலத்தின் அடித்தளத்தைப் பற்றியும் அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை. இவை எதனால் ஆனவை? ஓர் ஆராய்ச்சியாளர் கடல் நீர் ஆவியாகும்போது கிடைக்கும் சோடியம் குளோரைடு, மக்னீஷியம் குளோரைடுஆகிய உப்புக்களினால் இவ் வாயு மண்டலத்தின் அடிப் பகுதி நிறைந்திருக்கும் என்கிறார். சமீபத்தில் சில விஞ்ஞானிகள் வீனஸ் கிரகத்தின் மேற்பரப்பில் சூழ்ந்திருப்பது மிகக் கடுமையான ஒரு விஷ வாயு. இது கிரகத்தின் மேற்பரப்பு வரை வியாபித்துள்ளது. என்று தங்களது ஆராய்ச்சி முடிவில் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் விண்வெளிப் பயணிகளுக்கு இது ஒரு பெரிய பிரச்னைதான்.

வீனஸ் 'சூரியனின் அருகே இருப்பதாலும்,





★ சூரியனிலிருந்து இரண்டாவது கிரகமான வீனஸின் மேற்பரப்பு இப்படி இருக்கலாம் என்ற விஞ்ஞானிகளின் ஊகத்துக்கு ஏற்ப ஓவியர் வரைந்துள்ள கற்பனைக் காட்சி இது. சதா மின்னலடித்தபடியும், கனன்று கொண்டிருக்கும் எரிமலைகளும், உள்ள இக் கிரகத்தில் விண்வெளிக் கலன் வந்து இறங்கும் காட்சி.

இதன் மேற்பரப்பிலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தை இதைச் சூழ்ந்துள்ள வாயு மண்டலம் வெளியேற அனுமதிக்காத தாலும் இந்தக் கிரகத்தின் மேற்பரப்பு மிக்க உஷ்ணமாக— 250 டிகிரி ஃபாரன் ஹீட் வரை இருக்கலாம் என்று கருதப் படுகிறது. கடல் மட்டத்தில் பூமியில் தண்ணீரின் கொதிநிலையைப்போல மூன்று மடங்கு இது.

மேக மூட்டத்தின் கீழே — வீனஸின் மேல் பரப்பு எப்படி இருக்கும்? இதற்கு இன்றுவரை யாராலும் உறுதியான முடிவைக் கூற முடியவில்லை. சிலர்— இக் கிரகத்தின் மேல் பரப்பு முழுதும் எண்ணெய்க் கடலால் மூடப்பட்டிருக்கும் என்கிறார்கள். சிலர் இக் கிரகம் நீரால் மூடப்பட்டிருப்பதாகக் கருதுகிறார்கள். மேகப் படலத்தின் கீழே பயங்கரமான கானகமும், விநோதமான ஜீவராசிகளும் இருக்க வேண்டும். மிக மிக உஷ்ண மண்டலக் காடுகளையும் அதில் வாழும் தகுதி பெற்ற மிருகங்களையும் கற்பனை செய்கிறார்கள். 'உஷ்ணத்தினால் சுட்டெரிக்கப்பட்டு, கருகிய புழுதி மூடிய கிண்ணத்தைப் போன்றது. வெப்பக் காற்றும் சூறாவளியும், மின்னல்களும் நிறைந்த பிரதேசம்' என்பது ஓர் ஊகம். எவ்வித ஜீவனும் வாழத் தகுதியற்ற ஒரு பாலைவனம் என்கிறார்கள் சில விஞ்ஞானிகள். வீனஸ் கிரகத்தைச் சூழ்ந்துள்ள மூடுபனி போன்ற வாயு மண்டலத்தில் கணக்கற்ற நுண்ணிய ஜீவராசிகள் இருப்பதாகவும் இவை இறந்து வீனஸ் கிரகத்தின் மேற்பரப்பில் மழை போல விழும் என்றும், அவைகளை உண்ணுவதற்கு வீனஸின் மேற் பரப்பில் நண்டு போன்ற ஜீவராசிகள் காத்திருக்கும் என்றும் சில விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். எல்லாமே ஊகம்தான். உண்மை நிலையை இதுவரை யாராலும் உணர்ந்து அறிய முடியவில்லை.

அளவு, பிரகாசம், அடர்த்தி ஆகியவைகளில் பூமியைப் போலவே இருக்கிறது வீனஸ். இதன் மேற்பரப்பின் தன்மையை அறிய முடியுமானால் பூமியின் பரிணாம வளர்ச்சியின் ரகசியமும் விளங்கிவிடும் என்று நினைக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

வீனஸ் கிரகத்தை வான சாஸ்திரிகள் எப்படியெல்லாம் ஆராய்ந்தார்கள் என்பதைப் பார்ப்போம். 1609ல்-முதன் முதலில் காலிலியோ வான மண்டலத்தை ஆராயும் தூரதரிசினியைக் கண்டு பிடித்தார். அதிலிருந்து வீனஸ் கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியும் ஆரம்பமாகியது. பூமிக்கு அடுத்த வீட்டுக்காரர்களாக விளங்கும் கிரகங்கள் இரண்டு. ஒன்று வீனஸ் (சுக்கிரன்) மற்றது மார்ஸ். (செவ்வாய்—அங்காரகன்.) கிட்டத்தட்ட பூமி அளவே உள்ள கிரகங்கள் இவ்விரண்டும். தூரதரிசினியில் முன்னேற்றங்கள் ஏற்பட்டபிறகும் வானசாஸ்திரிகளுக்கு ஏமாற்றத்தையே கொடுத்தாள் வீனஸ் அழகி. தன் மேற்பரப்பு ரகசியங்களை அம்பலமாக்கவில்லை.

மாரினர்—2 என்ற முதல் விண்வெளி சாதனம் புளோரிடாவின் கேப் கானவரல் தளத்திலிருந்து 1962ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ந் தேதி அனுப்பப்பட்டது. மூன்றரை மாதங்களில் 180,200,000 மைல்கள் பிரயாணம் செய்து இக்கலன் சில சங்கேதங்களைப் பூமிக்கு அனுப்பியது.


அமெரிக்கர்களை ஆராயவிட்டு ரஷ்யர்கள் சும்மா இருப்பார்களா? வெனராஸ் 2, 3 என்ற கலன்களை 1966 பிப்ரவரியில் வீனஸுக்கு அனுப்பினார்கள். ஆனால் அதிலிருந்து தகவல்களைப் பெறமுடியவில்லை. தொடர்பு விட்டுப் போயிற்று. 1967ல் வெனரா 4 என்ற கலன் வீனஸில் போய் இறங்கியது. பலன் இல்லை. அமெரிக்க மாரினர் 5 கலன் வீனஸுக்கு 2500 மைல்கள் அருகே பறந்து சென்றது. 1969ல் ரஷ்யர்களின் வெனராஸ் 5, 6 வீனஸில் போய் இறங்கியது. 1970ல் வெனரா 7 வீனஸிலிருந்து அரை மணி நேரத்துக்குச் செய்திகளைத் தொடர்ந்து அனுப்பியது. அதன்படி வீனஸின் மேல் பரப்பில் 90 சதவிகிதம் கரியமில வாயு, உஷ்ண நிலை 890 டிகிரி ஃபாரன் ஹீட். அதன் மேற்பரப்பின் அழுத்தம் பூமியைப் போல் நூறு மடங்கு அதிகம் என்ற உண்மைகள் தெளிவாயின. மனிதன் வீனஸில் இறங்க முடியுமானால் அங்கு அவன், பீதியடையச் செய்யும் ஒரு வகை ஒளியையும், செந்தழலான ஆவி போன்ற புகையையும் கிறீச்சிட்டுச் செல்லும் சூறாவளிக் காற்றையும் தவிர வேறு எதையும் காணவோ, கேட்கவோ முடியாது. கிண்ணத்தின் உட்புறத்தைப் போன்ற அமைப்பும் மேற்பரப்பின் பெரும்பாகம் உருகிய நிலையிலும் பாறைகள் அரிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து மின்னல்கள் பளிச்சிட்டபடியும் வீனஸ் கிரகம் இருக்கும் என்று சமீபத்திய விண்வெளி ஆராய்ச்சியின் ஊகங்கள் கூறுகின்றன. வருங்காலத்தில் செயற்கை சாட்டலைட்டுகளும், பலூன்களும், காப்ஸுல்ஸ்களும் விண்வெளி ஆராய்ச்சியில் பல புதிய தகவல்களை நமக்குத் தரலாம்.

—கிருஷ்ணவேணி

காந்திஜியின் அறிவுரை

‘நல்ல கையெழுத்துக்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லை யென்று எனது இளமைப் பருவத்தில் எனக்கு ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. பிற்காலத்தில் தென்னாப்பிரிக்காவில் வக்கீல்கள் இளைஞர்கள் முதலியோரின் அழகான கையெழுத்தைப் பார்த்த போது நான் வெட்கமும் பச்சாத்தாபமும் அடைந்தேன். அவலட்சணமான கையெழுத்தைக் கல்விப் பயிற்சியின் குறைபாட்டுக்கு ஓர் அறிகுறியாகக் கொள்ள வேண்டும். பின்னால் கையெழுத்தை விருத்தி செய்ய எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை. இளமையில் அசட்டை செய்ததின் தீய பயனை இன்றளவும் நிவர்த்தி செய்ய முடியவில்லை. சிறுவர்களும், சிறுமிகளும் என்னுடைய உதாரணத்தை ஓர் எச்சரிக்கையாகக் கொண்டு, நல்ல கையெழுத்து கல்வியின் ஓர் அவசியமான பகுதி என்பதை உணர்வார்களாக.’

— சத்திய சோதனையில் காந்திஜி



பரிசு

காந்திஜி தம் கையெழுத்தைப் பற்றிக் கூறியுள்ளதைப் படித்ததும் உங்களுடைய கையெழுத்து கண்முன்னால் வந்து நின்று சிரிக்கிறது, இல்லையா? உங்களில் எத்தனையோ பேருக்குக் காந்திஜியினுடைய கையெழுத்தைப் போலவே, ஏன் இன்னும் மோசமாகக் கூட இருக்கும். ஆனால் அதற்காகக். கலங்க வேண்டாம். அண்ணலின் அறிவுரையின்படி அதை இப்போதே மாற்றித் திருத்திக்கொள்ளலாம். காந்திஜி வாய்க்கவில்லையே என்று ஏங்கிய அந்த அற்புதமான கையெழுத்து உங்களில் பலருக்கு வாய்த்திருக்குமில்லையா? ஒரு தபால் கார்டை எடுங்கள். அதில் ஒரு பக்கத்தில் உங்கள் தமிழ்ப் பாடப் புத்தகங்களிலிருந்து ஏதாவது ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அதில் அழகாக எழுதுங்கள். பின்னால் உள்ள அரைப் பக்கத்தில் மேலே, ‘கையெழுத்துப் போட்டி’ என்று எழுதிப் பிறகு உங்கள் விலாசத்தையும் படிக்கும் வகுப்பு, பள்ளி ஆகியவைகளையும் எழுதி ‘ஆசிரியர் கோகுலம் சென்னை—31’ என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள். மிக அழகான கையெழுத்து என்று எங்களால் கருதப்படும் தபால் அட்டையை அனுப்பியவருக்கு ஒரு வருஷத்துக்குக் கோகுலம் இதழ்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். கடிதங்களை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி 15—5—74. உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகள் மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். கறுப்பு மசியினால் எழுதினால் நல்லது. பென்சிலால் எழுதி அனுப்பக் கூடாது.

— ஆசிரியர்.

மீண்டும் பீரங்கிச் சத்தம் கேட்டது. அந்த அதிர்ச்சியைத் தாங்காது பூமிகூட இலேசாக அதிர்ந்தது.

கோட்டைக்குள் அங்கங்கே தனித் தனியாகப் பங்களாவுக்குள் வசதியாக வாழ்ந்து கொண்டிருந்த ஆங்கில அதிகாரிகள் எல்லோரும் மேஜர் ஸ்கினின் பெரிய பங்களாவில் கூடியிருந்தனர். எல்லோர் முகங்களிலும் ஒரே கலவரம்.

அவசரமாக உள்ளே வந்த ஸ்கின், கூடியிருந்தவர்களைப் பார்த்து, ''காரணமாகத்தான் உங்களையெல்லாம் அவசரமாக வரும்படி செய்தி அனுப்பினேன். நாம் சற்றும் எதிர்பாராதது நடந்து விட்டது. விடுதலைப் படையினர் என்ற பெயரில் புரட்சிக்காரர்கள் ஆயிரக் கணக்கில் கூடிக் கோட்டையைத் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நமது படையினர் எதிர்த் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நமது படையினர் நமக்குத் துரோகம் இழைக்காதவரையில் வெற்றி நமக்குத்தான். நாம் எதையும் வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். அதனால் எல்லோரும் இருட்டுவதற்கு முன்பு குடும்பத்தோடு இங்கே வந்து விடுங்கள். இதை விடப் பாதுகாப்பான இடம் இந்தக் கோட்டையில் இல்லை'' என்று கூறியது தான் தாமதம், கூடி யிருந்தவர்கள் அனைவரும் மூலைக்கு ஒருவராக ஓடினர்.

பயம் நிறைந்த வெளிறிப் போன முகத்தோடு அவர்கள் ஓடுவதையே பார்த்துக் கொண்டிருந்த மேஜர் ஸ்கின் திரும்பிப் பார்த்தார். அவருடைய நம்பிக்கை மிகுந்த பணியாள் பகதூர் நின்று கொண்டிருந்தான்.

''பகதூர்! எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்.''

''உத்தரவிடுங்கள், துரை. நான் உங்கள் அடிமை. ஆற்று வெள்ளத்தில் அடித்துப் போக விருந்த என்னைக் காத்து உயிர்ப் பிச்சை அளித்த உங்களுக்கு நான் எதையும் செய்யக் காத்திருக்கிறேன்'' என்று நன்றியோடு கூறினான் பகதூர்.

''மிகவும் அபாயமான செயல்தான். நான் உடனே கோட்டையை விட்டு வெளியே சென்று மகாராணியைச் சந்திக்க வேண்டும். வெளியே புரட்சிக்காரர்கள் ஆயிரக்கணக்கில் கூடித் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கடந்து, அவர்களுக்குத் தெரியாது போவது மிகவும் கஷ்டம்தான். ஆனாலும் என்னைச் சேர்ந்த மற்றவர்களுக்காக இதை நான் செய்துதான் ஆக வேண்டும். உன்னால் எனக்கு உதவ முடியுமா?''

பகதூர் சிறிது நேரம் சிந்தித்தான். பிறகு கூறினான்: ''உங்களுக்கு என்னால் உதவ முடியும் துரை. ஆனால் நான் கூறுவது போல் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்....''

''உன் திட்டத்தைக் கூறு பகதூர்!''

''என் உறவினர் ஒருவர் இன்று மாலை இறந்து விட்டார். அவர் ஒரு வைத்தியர். அக்கம் பக்கத்துக் கிராமங்களில் நல்ல செல்வாக்குப் பெற்றவர். கோட்டையைத் தாக்கிக் கொண்டிருக்கும் விடுதலைப் படையினருக்கும் அவர் வேண்டியவர். 'எங்கள் குல முறைப்படி சவ அடக்கம் மாலையில் சந்திரன் உதித்த பிறகு கோட்டைக்கு வெளியே நடக்க வேண்டும். உரிய மரியாதைகளோடு சவ அடக்கம் செய்து கொள்ளலாம். அதற்கு நாங்கள் தடையாக இருக்க மாட்டோம்' என்று விடுதலைப் படையினரின் தலைவர் காலேகான் தெரிவித்திருக்கிறார். நாங்கள் போகும்போது எங்களோடு மாறு வேடத்தில் நீங்கள் வந்தால் எளிதாகக் கோட்டையைவிட்டு வெளியேறி விடலாம்.''

குலப்பெருமை

ரேவதி



"நான் தயார் பகதூர். இந்த உதவிக்கு உனக்கு எப்படிக் கைம்மாறு செய்யப் போகிறேனோ?" என்று உற்சாகமாகக் கிளம்பினார் மேஜர் ஸ்கீன்.

மேஜர் ஸ்கீன் யார் என்பதை உங்களுக்குக் கூறவில்லையே!


வியாபாரிகளாக வந்த ஆங்கிலேயர்கள் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் நமது நாட்டை அடிமைப் படுத்தி ஆண்டார்கள். அவர்கள் வருவதற்கு முன்பு நமது நாடு பல சிறு இராஜ்யங்களாகச் சுதேச மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவற்றில் ஒன்றுதான் ஜான்சி. ஆங்கிலேயர்கள் ஒரே நாளில் நமது நாட்டை அடிமைப்படுத்தவில்லை. இதற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. சிறிது சிறிதாக ஒவ்வோர் இராஜ்யமாக அவர்கள் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார்கள்.


முதலில் தங்களுடைய வியாபாரப் பொருள்களைப் பாதுகாத்து வைத்துக் கொள்ளச் சிறு கோட்டைகள் கட்டிக் கொள்ளவும், அதில் தற்காப்புக்காகச் சிறு படைகளை வைத்துக் கொள்ளவும் சுதேச மன்னர்களிடம் அனுமதி பெற்றனர்.

சுதேச மன்னர்களிடம் ஒற்றுமை இல்லை. ஒருவரை மற்றவர் அழிப்பதில் தீவிரமாக இருந்தனர். இந்தப் பலவீனத்தை ஆங்கிலேயர்கள் பயன்படுத்திக் கொண்டனர். மன்னர்களுக்கு உதவத் தங்களுடைய தற்காப்புப் படையை அனுப்பி வெற்றி தேடிக் கொடுத்துச் செல்வாக்குப் பெற்றனர். அவர்களுடைய ஆதரவை நாடும் மன்னர்கள் அதிகமாகவே, அதையே காரணமாக வைத்துக் கொண்டு அதிகாரத்தில் தலையிடத் தொடங்கினார்கள். நாளடைவில் இப்படிப் பல இராஜ்யங்கள் ஆங்கிலேயர் அதிகாரத்தின் கீழ் வந்தன. அவர்களுக்கு ஆசை அதிகரித்தது. இந்தியா முழுவதையுமே தங்கள் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப் பேராசை கொண்டார் அப்போதிருந்த கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு. பிள்ளைகள் இல்லாத சுதேச மன்னர்கள் வளர்ப்புப் பிள்ளைகளை ஏற்பதை அவர் தடை செய்தார்.

ஜான்சி மன்னர் கங்காதர ராவ், தமக்குப் பிள்ளை இல்லாததால், இறப்பதற்கு முன்பு தாமோதரன் என்ற சிறுவனை வளர்ப்பு மகனாக்கிக் கொண்டார். தமக்குப் பிறகு தாமோதரனே ஜான்சிக்கு மன்னனாக வேண்டும், அவனுக்கு வயது வரும் வரை தன் மனைவி ராணி லட்சுமிபாய் ஜான்சியை ஆள வேண்டும் என்று அவர் ஏற்பாடு செய்தார். அவர் இறந்ததும், தாமோதரனை அவர் வளர்ப்பு மகனாக்கிக் கொண்டதை அனுமதிக்க மறுத்த கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு, ஜான்சியின் ஆட்சியைத் தாமே ஏற்றுக் கொண்டார்.


ஜான்சியின் அளப்பறிய செல்வங் கொண்ட பொக்கிஷத்தைத் தனதாக்கிக் கொண்டு பிச்சையிடுவது போல் பென்ஷன் என்ற ஓய்வுத் தொகையை மாதா மாதம் வழங்க முடிவு செய்தது ஆங்கில ஆதிக்





கிட்டு: சிலந்தியே! இத்தனை அழகான பட்டு நூல் உனக்கு எப்படிக் கிடைக்கிறது?

சிலந்தி: இந்தப் பட்டு நூலை நானே தயாரிக்கிறேன். என் உடலில் ஒருவிதத் திரவம் சுரக்கிறது. அதைக் கொண்டு நான் இந்த மெல்லிய பட்டுநூலை நூற்கிறேன். என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தால் நான் எப்படி நூல் நூற்கிறேன் என்பது உனக்குப் புரியும்.



ஓ! அப்படியா?

கம். அது மட்டுமா? ஜான்சி மன்னர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த மாளிகைகளையும், கோட்டையையும் எடுத்துக் கொண்டு ராணி லட்சுமி பாயை வெளியே அனுப்பியது.

ஆங்கிலேயர்கள் இத்துடன் நிற்கவில்லை. கோட்டைக்குள் மன்னர்களுக்குச் சொந்தமான லட்சுமி ஆலயம் ஒன்று இருந்தது. அதை ராணி கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தாள். அதன் நிர்வாகச் செலவை ஜான்சி மன்னர்களே ஏற்று நடத்தி வந்தனர்.

ஆலயத்தின் நிர்வாகச் செலவை ஏற்க ஆங்கில அரசு மறுத்தது. தெய்வ நம்பிக்கை மிகுந்த ராணி—தனக்கு அளிக்கப்பட்ட ஒய்வுத் தொகையிலிருந்தே அதை ஏற்க முன் வந்தாள். தங்கள் அதிகாரிகளின் உணவுக்காக ஆலயத்துக்கு அருகிலேயே பசுக்களை வதைக்க ஆங்கில அரசு அனுமதித்தது. தெய்வ நம்பிக்கை மிகுந்த ராணியால் இதைத் தாங்க முடியவில்லை.

தங்கள் அன்புக்குரிய ஜான்சி ராணிக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு ஆத்திரம் அடைந்த ஜான்சி மக்கள் ஆங்கிலப் படையை அழித்து விட்டு லட்சுமி பாயை மீண்டும் ராணியாக்கக் கொதித்தெழுந்தனர். ஜான்சி மக்களின் வீரத்தில் ராணி லட்சுமி பாய்க்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. ஜான்சியில் ஆங்கில ஆதிக்கத்தை அழித்துவிட்டுத் தன்னை மீண்டும் ராணியாக்கும் சக்தி தன்னுடைய மக்களுக்கு உண்டு என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். ஆனாலும் அவள் மக்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு அளிக்கவில்லை.

ராணி ஆதரவளிக்காததுக்கும் காரணம் இருந்தது. அப்பொழுது ஏறக்குறைய இந்தியா முழுவதும் படைபலம் மிக்க ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் பரவியிருந்தது. அதனால் ஜான்சியில் தன் மக்கள் பெற்றுத் தரக்கூடிய வெற்றி நிரந்தரமானதாக இருக்க முடியாது என்பதை ராணி நன்கு அறிந்திருந்தாள். இதைவிட இந்தியா முழுவதும், ஜான்சியைப் போலவே ஒரே சமயத்தில் ஆங்கிலேயர்களை எதிர்க்க மக்கள் ஒன்று திரண்டால், ஆங்கில ஆதிக்கத்தை வேரோடு களைந்துவிடலாம் என்று எண்ணினார் ராணி.

ஆங்கில ஆதிக்கத்தில் கசப்படைந்திருந்த மக்கள் ஒன்று திரண்டு போராட எழுந்தனர். இந்து முஸ்லீம் என்ற வேற்றுமையை மறந்துவிட்டுப் பொது எதிரியான ஆங்கில ஆதிக்கத்தை விரட்ட இந்திய மக்கள் ஒன்று கூடினர். மீரட்டில் தொடங்கிய இந்த முதல் இந்திய விடுதலைப் போராட்டம் பஞ்சாபைக் கடந்து, ஜான்சிக்கும் பரவியது.

ஜான்சியில் கோட்டைக்குள் வசதியாக வாழ்ந்து கொண்டிருந்த ஆங்கில அதிகாரிகள் எவருமே இந்தப் போராட்டத்தை எதிர்பார்க்கவில்லை. காலே கான் என்ற படை வீரன் தலைமையில் ஆயிரக்கணக்கான விடுதலைப் படையினர் ஒன்று திரண்டு கோட்டையைத் தாக்கத் தொடங்கினர். ஆங்கிலேயர்களிடம் வெறுப்புக் கொண்டிருந்த இந்திய சிப்பாய்களும் விடுதலைப் படையினருடன் சேர்ந்து கொள்ளவே நிலை மிகவும் மோசமாகியது. கோட்டைக்குள் இருந்த ஆங்கில அதிகாரிகள் தங்களுடைய நிலை என்னவாகுமோ என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தார்கள். விடுதலைப் படையினரிடம் ராணிக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அதனால் ராணி மனமிரங்கினால் கோட்டைக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் ஆங்கில அதிகாரிகளையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் காக்கலாம் என்ற நம்பிக்கையில், பகதூரின் உதவியால் மாறுவேஷத்தில் கோட்டையை விட்டு வெளியேறிய மேஜர் ஸ்கீன் மிகவும் கஷ்டப்பட்டு இறுதியில் ராணிடம் வந்து சேர்ந்தார்.

ராணி லட்சுமிபாயோடு அவளுடைய தந்தை மோரோபார்த்தும் இருந்தார். கோட்டைக்குள் சிக்கிக் கொண்


டிருக்கும் அவர்களுடைய குடும்பத்தினரையும் காக்க வேண்டும் என்று மேஜர் ஸ்கீன் ராணியிடம் வேண்டிக் கொண்டதும் மோரோபந்த் வெகுண்டார்.

''எந்த உரிமையோடு இந்த வேண்டுகோளைக் கேட்கிறீர்கள்? ராணிக்கு நீங்கள் இழைத்துள்ள அநீதிகள் ஒன்று இரண்டா? அவளுக்குச் சேர வேண்டிய அரசுடைமையைப் பறித்துக் கொண்டீர்கள். விலை மதிப்பில்லாப் பொக்கிஷத்தையும், நகைகளையும் அபகரித்துக் கொண்டீர்கள். எவ்வளவோ வேண்டிக் கொண்டும் தொடர்ந்து எங்கள் தெய்வங்களை இழிவுபடுத்தினீர்கள். கோட்டையில் வாழ்ந்து வந்த ராணியை விரட்டி விட்டுக் கோட்டைக்குள் வசதியாக நீங்கள் வாழ்ந்தீர்கள். இவ்வளவு கொடுமைகளை இழைத்துவிட்டு உயிருக்கு ஆபத்து வந்ததும் அடைக்கலம் தேடி இங்கே வந்துவிட்டாயே!'' என்று இரைந்த மோரோபந்த் ராணி லட்சுமிபாயிடம் திரும்பி, ''அம்மா, லட்சுமி! இந்த மேஜரின் கண்ணீரைக் கண்டு இரங்கிவிடாதே. நம்மைக் கண்ணீர் விட வைத்தவர்கள் இவர்கள் என்பதை மறந்து விடாதே, அம்மா'' என்றார்.

தன்னெதிரே நின்று கொண்டிருக்கும் மேஜர் ஸ்கீனை நோக்கியபடி ராணி சிறிது நேரம் யோசித்தாள். தன்னுடைய வேண்டுகோள் ஏற்கப்படும் என்ற நம்பிக்கை மேஜருக்கு இல்லை.

''அப்பா'' என்று அழைத்த ராணி, ''இவர் நம்மை வஞ்சித்தவர் என்பது உண்மைதான். இவர்கள் என்னுடைய அரசுரிமையைத்தான் பறித்துக்கொண்டார்களே தவிர, ஜான்சி அரசமரபின் குலப் பெருமையை அல்ல. அதை யாராலும் பறிக்க முடியாது. தேடி வந்தவர்களுக்கெல்லாம் வாழ்வழங்கி ஆதரித்துப் பெருமைகொண்ட ஜான்சி மன்னர் பரம்பரையில் வந்த நான், உயிருக்கு அஞ்சி அடைக்கலம் தேடி வந்துள்ள இவருக்குப் புகலிடம் கொடுக்க மறுப்பது என்னை நானே அவமதித்துக் கொள்வதாகும்'' என்று கூறிவிட்டு மேஜரிடம் திரும்பினாள். ''மேஜர் இருக்கும் நிலையைப் பார்த்தால் இன்று இரவே கோட்டை விடுதலைப் படையினரிடம் விழுந்துவிடும். நீங்கள் கொடுக்க மறுத்த அரசுரிமை எனக்குக் கிடைத்துவிடும் என்று நம்புகிறேன். அரசுரிமையை மீண்டும் ஏற்பதற்கு முன்பு கோட்டைக்குள் நான் மதித்து வணங்கிய லட்சுமி ஆலயத்துக்குப் போவதாக இருக்கிறேன். அப்படி நான் போகும்போது என்னோடு ஐம்பது மூடு பல்லக்குகளும் வரும். உங்கள் அதிகாரிகளைக் குடும்பத்தோடு அவற்றில் இரகசியமாக ஏற்றிப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று கம்பீரமாகக் கூறினாள்.

மேஜர் ஸ்கீனின் கண்கள் கலங்கின. ''உண்மையில் ராணி என்ற பட்டத்துக்கு ஏற்றவர் தாங்கள் தான். படை பலத்தால் பகைவர்களை வென்று வாழ்கிறோம் நாங்கள். ஆனால் மக்களைக் கருணையால் வென்று வாழ்கிறீர்கள் நீங்கள். ஆயிரம் கவர்னர்கள் ஒன்று கூடினாலும் ராணி லட்சுமிபாயின் பரந்த கருணை உள்ளத்துக்கு ஈடாக மாட்டார்கள். பகைவனுக்கு அடைக்கலம் அளித்துக் குலப் பெருமையின் மாட்சியை நிலைநிறுத்தி விட்டீர்கள் ராணி!'' என்று முகத்தை மூடிக் கொண்டு விம்மினார், கல் நெஞ்சம் படைத்த மேஜர் ஸ்கீன்.




பாலு வாங்கி வந்தது என்ன?


பாலுவைக் கூப்பிட்டாள் அவன் அம்மா. அவனிடம் பத்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து ஏதோ வாங்கி வரும்படி கூறினாள்.

அம்மா கொடுத்த பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு கடைக்கு ஓடினான் பாலு! கடைக்காரரிடம் அந்த ரூபாயைக் கொடுத்து, ஒன்று ஒரு ரூபாய் வீதம் எட்டும், பத்து பைசாவுக்கு ஒன்று வீதம் இருபதுமாக அம்மா சொன்னவைகளை வாங்கிக் கொண்டு திரும்பினான். வரும்போது அவன் கையில் அம்மா கொடுத்த பத்து ரூபாய் அப்படியே மீதமிருந்தது. கடைக்காரன் இலவசமாகவோ கடனாகவோ எதையும் கொடுக்கவில்லை. அப்படியானால் பாலு வாங்கி வந்தவை என்னவென்று கண்டு பிடித்துச் சொல்லுங்களேன், பார்க்கலாம்!

—ரமணி ரங்கநாதன்


அற்பனே, நான்
ஒழிந்தால் நீயே
மன்னனாகி விடலாம்
என்ற ஆசையால்
தானே குகை
வாசலை மூடிவிட்டு
வந்து இங்கு மகுடா
பிஷேகம் செய்து
கொண்டிருக்கிறாய்?
அண்ணா, தாங்கள் தான் இறந்துவிட்டீர்
கள் என்று தவறாக எண்ணி விட்டேன்.
என்னை மன்னித்து விடுங்கள்.
இங்குள்ளவர்க
ளின் வற்புறுத்த
லுக்காகவே சிம்
ஹாசனம் ஏறினேன்.
இப்போதே இந்த
நாட்டைத்தங்கள்
வசம் ஒப்படைக்
கிறேன்.
துரதிர்ஷ்ட வசமாக வாலி, சுக்ரீ
வனின் வார்த்தையை நம்பவில்லை.
சுக்ரீவா வாலியை
வெல்ல உன்னால் முடியாது
மதங்கரின் சாபப்படி ரிஷ்ய
முக பர்வதத்துக்கு வாலியினால்
வர முடியாது. நாம் அங்கே
போய் விடுவது
விவேகமாகும்.
அனுமாரின் ஆலோசனைப்படி
சுக்ரீவனும் அவனுடைய ஆதரவாளர்
களும் ரிஷ்யமுக பர்வதம் சேர்கின்றனர்.
வீரமில்லாதவனே! நான்
வரக்கூடாத இடத்திலே போய்
ஒளிந்து கொண்டாயா? இங்கு
வந்தால் உன்னை
யமனுக்கு விருந்தாக்
குவேன், நினைவிருக்கட்டும்.
தொடரும்


கிஷ்கிந்தைக்குத் திரும்பினான் சுக்ரீவன்....
மாயாவியும் அவனுடைய அரக்கர் கூட்டமும் அண்ணா வாலியைக் கொன்று விட்டார்கள்.
ஐயோ! நாதா! உங்களுக்கா இந்தக் கதி? என்னால் நம்பவே முடியவில்லையே. இனி நான் எப்படி வாழ்வேன்?
ஜெய் ஹனுமான் 10
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
வானர ராஜ்யத்துக்கு அரசனாகச் சுக்ரீவன் முடி சூட்டப்படுகிறான்.
அஞ்சனை மைந்தா, என்னுடைய பிரதம மந்திரியாக உன்னை நியமிக்கிறேன்.
குகைக்குள்ளே, வாலி, மாயாவியையும் மற்றையோரையும் வதம் செய்து வெற்றி வீரனாகத் திரும்பும் போது....
குகையின் வாசல் மூடப்பட்டிருக்கிறதே... சுக்ரீவா... தம்பி.. சுக்ரீவா..? அடப்பாவி? அப்படியா?
அரக்கர்களிடமிருந்து மீளாமல் சாகவேண்டும் என்றே வெளியே வரமுடியாதபடிக் குகைவாசலை மூடிவிட்டுப்போனாயா சுக்ரீவா? அட நய வஞ்சகா? தம்பியா நீ?
பெரிய பாறை இசகு பிசகாகக் குகை வாசலை நன்கு அழுத்தி மூடிக் கொண்டிருக்கிறது. மகா பலசாலியான வாலிக்குமே அதை அப்புறப் படுத்தப் பல நாட்களாகின்றன.
சுக்ரீவா! என்னைக் கொல்ல நினைத்த உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்



பறவையின் போதனை

அழகிய பறவை ஒன்றை விலைக்கு வாங்கி வந்த வியாபாரி ஒருவன், அதைக் கூண்டில் அடைத்து வளர்த்து வந்தான். ஒரு நாள் அந்தப் பறவை சொல்லிற்று: '' வர்த்தகரே! என்னை அடைத்து வைப்பதால் உங்களுக்கு ஒரு பயனும் கிட்டாது. கூண்டுக் கதவுகளைத் திறந்து என்னை வெளியேற அனுமதியுங்கள். உங்கள் வாழ்வை வளமாக்கும் மூன்று பொன்மொழிகளை உங்களுக்குச் சொல்லித் தருவேன்.'' பறவையின் பேச்சை நம்பிய வர்த்தகன் அதற்குச் சம்மதித்தான். வியாபாரியின் கைகளில் இருந்தபடியே ஒரு பொன்மொழியைச் சொல்லியபின், அவன் வீட்டுக் கூரையில் அமர்ந்தபடி அடுத்த பொன்மொழியையும், முழு விடுதலை பெற்றுத் தோட்டத்தில் உள்ள மரக் கிளை ஒன்றில் உட்கார்ந்த பிறகு, மூன்றாவது பொன்மொழியையும் சொல்வதாக அந்தப் பறவை கூறியது.


கூண்டைத் திறந்து பறவையை எடுத்து அதைத் தன் கையில் வைத்துக் கொண்டு, முதல் பொன்மொழியைக் கூறுமாறு அவன் கேட்டான். ''உன் வாழ்க்கையில் எதையாவது நீ இழக்க நேர்ந்தால், அது உன் உயிருக்குச் சமானமானதாக இருந்தாலும் அதைப் பற்றி வருந்தாதே'' என்றது பறவை.


முதல் பொன்மொழியின் தத்துவச் செறிவிலே மனம் நிறைந்த அந்த வியாபாரி பறவையைப் பறக்க அனுமதித்தான். அது — அவன் இல்லத்தின் கூரையில் அமர்ந்து கொண்டு கூறியது: ''ஆதாரமில்லாமல் எந்த ஒன்றையும் உன்னுடைய கண்களைக் கொண்டு நீ நேரிடையாகப் பரீட்சிக்காத வரை நம்பிவிடாதே!''

இரண்டாவது பொன்மொழியும் அருமையாகவே இருந்தது. பறவை பறந்து சென்றது. தோட்டத்திலே உள்ள பெரிய மரம் ஒன்றின் உயர் கிளையிலே; வர்த்தகன் இனி விரும்பினாலும் பிடிக்க இயலாத தொலைவில் அமர்ந்து கொண்டது அந்தக் கிளி. ''துரதிர்ஷ்டம் நிறைந்த வர்த்தகனே! என் வயிற்றில் இரண்டு விலை உயர்ந்த ரத்தினங்கள் உள்ளன. என்னைக்கொன்று என் வயிற்றைக் கீறியிருந்தால் அவைகளை நீ எடுத்திருக்கலாம்'' என்று கூறியது. கிளியின் இக்கூற்றைக் கேட்ட வர்த்தகன் ஆத்திரம் கொண்டான். இரண்டு இரத்தினங்களை இழந்தோமே என வருந்தினான். ஆனால் அவனால் இப்போது கிளியைப் பிடிக்க இயலாதே!

எனவே மனமுடைந்த அவன், ''சரி, மூன்றாவது பழமொழியையாவது சொல்லித் தொலை'' என்று விசனத்துடன் கடுகடுத்தான். கிளி நகைத்தது. ''என்னப்பா, நான் சொன்ன முதல் இரண்டு பொன்மொழிகளின் பொருளையே உணரத் தெரியாத உனக்கு மூன்றாவது பொன்மொழி எதற்கு? 'இழந்து போன எதற்கும் வருந்தாதே' என்றேன். நீயோ இரண்டு இரத்தினங்களை இழந்ததற்காக எரிச்சல் படுகிறாய். 'கண்ணால் காணாததை நம்பாதே' என்றேன். நீயோ என் வயிற்றுக்குள் ரத்தினங்கள் இருப்பதாக நம்புகிறாய். கண்ணால் காணா விநோதத்தை மெய் என்று நம்புகிறாய். அதை இழந்ததற்காக வருந்தவும் செய்கிறாய். முட்டாளே! என் வயிற்றுக்குள் இரண்டு இரத்தினக் கற்கள் போயிருக்குமானால் நான் உயிரோடு இருப்பேனா?'' என்று கூறிப் பறந்தது அந்தப் பறவை.

ஆதாரம்: ''மணிவிளக்கு''
தகவல்: டி.கே.எஸ். காதர்





சிரிக்கச் சிரிக்க...!
வலது பக்கம் பார்த்துப் போ! இடது பக்கம் பார்த்துப் போ! என்று சொல்கிறார்களே ஒழிய கீழே பார்த்துப் போ என்று யாராவது சொல்கிறார்களா?
"ஆறு பேருக்கு டிக்கட் இருக்குமா?"
"ம். தாராளமாக இருக்கு!"
"அப்போ சினிமா நன்று இருக்காது போலிருக்கு. டிக்கெட் வேண்டாம்"!
சினிமா
"காட்டில் வாழும் ஒன்பது பிராணிகளின் பெயர்களைச் சொல்லு!"
"நான்கு யானைகள், ஐந்து சிங்கங்கள்!"
"பணத்திலும் எதையும் வாங்கி விடலாம்."
"உண்மைதான். பணம் பணம்னு சொல்லி எங்கப்பா உயிரையே வாங்கி விடுறார் எங்கப்பா!"
நாய்க் குட்டி விற்பனை!
பையன்: ஐயோ! அம்மா, எனக்கு இந்த நாய் வேண்டவே வேண்டாம்.



ஆல்பினோ

உலகில் உள்ள ஒவ்வோர் இன மக்களும் உடல் நிறத்தில் மாறுபட்டிருப்பார்கள். நீக்ரோக்கள் கறுப்பு. ஆங்கிலேயர் சிவந்த நிறம். சீனர் மஞ்சள் நிறம். ஆனால் நிறமே இல்லாதவர்களை 'ஆல்பினோ' என்று கூறுவார்கள். நம்மில் சிலர் அபூர்வமாகப் பிறவியிலேயே வெள்ளை வெளேர் என்று காணப்படுகிறார்களே இவர்கள்தான் ஆல்பினோக்கள். மனிதர்களிடையே நிற வேறுபாடு எப்படி ஏற்படுகிறது? ஒவ்வொருவரின் உடலும் அவரவருடைய இனத்துக்கும் சூழலுக்கும் ஏற்றபடி ஒரு வகைப் பொருளை உற்பத்தி செய்கிறது. இத்துடன் குரோமோஜென், என்ஸைம் ஆகியவைகளும் சேர்ந்து அவர்களுடைய நிறத்தின் அடிப்படையாக அமைகிறது. மனிதர்களிடையே நிற வேறுபாட்டை உருவாக்குவது இந்தப் பொருள்கள்தான். உடலில் இப்பொருள்கள் குறையுமானால் நிறமற்ற நிலை ஏற்படும். இவர்களையே 'ஆல்பினோ' என்பார்கள். லத்தீன் மொழியில் ஆல்பஸ் என்றால் வெள்ளை என்று பொருள். அதிலிருந்து உருவானது ஆல்பினோ.

'ஆல்பினோ'வினால் பாதிக்கப்பட்ட மனிதனின் கண்கள் வெண் சிவப்பாக (பிங்க்) இருக்கும். ஒளியைப் பார்க்க முடியாமல் கூசும். இவர்கள் எப்போதும் சுருங்கிய கண்களுடனும் அடிக்கடி கண்களைக் கொட்டியபடியும் இருப்பார்கள். இவர்களின் உடலில் உள்ள ரோமங்கள் எல்லாம் வெள்ளையாக இருக்கும். உடலின் உள்ளே இருக்கும் திசுக்களும்கூட, — மூளை, தண்டு வடம் போன்றவை — வெள்ளையாகவே இருக்கும். ஆல்பினிசம் மனிதர்களுக்கு மட்டுமல்ல. தாவரம், பிராணிகள் பறவைகளிலும்கூட ஆல்பினிசம் உண்டு. வெள்ளை நிறமுடைய ஆல்பினோ மனிதர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளிடமும் இதன் குணங்கள் தொடருமாம். வெள்ளை எலி, முயல்கள் இவை ஆல்பினோக்களுக்கு உதாரணம். வெள்ளை அணில், வெள்ளை ஒட்டைச் சிவிங்கி இவைகளைக் கண்டவர்களும் இருக்கிறார்கள். வெள்ளை யானை, வெள்ளைப் புலி என்று செய்திகள் வருகின்றனவே அவை யெல்லாம் இந்த ஆல்பினோக் கோளாறினால்தான்

நாய்க் குடை


மழை காலத்தில் திடீரென்று ...
களில் வெள்ளையாக ஒரு வகைச் செடிகள்
இருப்பதைக் காணலாம். இதை நாய்
என்பார்கள். ஆங்கிலத்தில் இதற்கு ...
டோட்ஸ்டூல்ஸ் என்று பெயர். நாய்க்கும்
எவ்விதத் தொடர்பும் கிடையாது. இந்த
ரத்துக்கு இப்படி யொரு விநோதமான ...
நாய்க் குடைகளுக்கும் விதையு...
தாவரம் கிடையாதே. ஆனால் நாய்க்...
தாவரம். நாய்க் குடையின் குழாய் போ...
தின் உச்சியில் வட்டமான குல்லாய் போன்...
தண்டுக்கு ஸ்டிப் (Stip) என்றும் குல்லாய்க்...
என்றும் பெயர். தண்டுப் பகுதியின் ...
போன்ற அமைப்பு (காலர்) உண்டு. இதற்...
lus) என்று பெயர். இந்த ஸ்டிப்பின் உச்சி...
ஓரப் பகுதிகளை நோக்கி இலைகளைப் போ...
அல்லது லாமலி (Lamelle) என்று பெயர்...
விதைகளல்ல. இங்கு ஜீவ அணுக்களான...
காற்று இந்த வித்து மூலமான ஜீவ அணுக்...
கதகதப்பும், ஈரப்பும், உணவும்...
ஸ்போர் அணு வெகு விரைவில் உணவ...
சங்கிலித் தொடர் போன்ற இதற்கு ...
ஹைபாக்கள் சேர்ந்த கொத்துக்கு மைசி...
ஒவ்வோர் இணைப்பிலும் குண்டுசித் ...
இவையே பிறகு பெரிய பெரிய நாய்க் குடை...
திடீரென்று ஒரு நாள் தோட்டத்...
தினால் தோன்றிய மாயாஜாலமாகாது. ...
தின் ஒரு நிலைதான் அந்த நாய்க் குடைகள் ...
வளமான சத்துணவாகும். இதனால் சில நா...

சீமை எலி

சீமையில் இதற்குக் கினியா பன்றி...
மல்ல. இதற்கும் கினியா நாட்டுக்கும் எவ்...
தைச் சேர்ந்த பிராணி இது. இதன் உண்மை...
பிராணி இனத்தைச் சேர்ந்தது. ஸ்பானிஷ்...
காலடி வைப்பதற்கு முன்னால் பெரு, ஈக்வட...
பூர்வ குடிகள் இந்தக் கொறித்துத் தின்னும்...
உணவுக்காக அங்கிருந்து இந்தக் கினியா ...
னார்கள். ஐரோப்பா எங்கும் சுவையான இ...
வளர்க்கலானார்கள். சீமை எலி (ஆனால் இ...
பவுண்டு எடையும் உடையது. இதற்கு வ...
முன்னங் கால்களில் நான்கு விரல்களும் பி...
எல்லா விரல்களிலும் நீண்ட நகங்கள் உ...
உணவு உண்ணும்போது பின்னங் கால்களில்...
போது பூமியில் குழி பறித்து அதில் வசிக்கு...
மில்லாத பகல்போதிலும் இரை தேடக் ...
கிடைக்குமானால் இதற்குத் தண்ணீரே ...
முயலுக்குப் போடும் உணவைக் கொடுக்க வே...
வருஷத்தில் இரண்டு அல்லது மூன்...
விருந்து எட்டுக்கு மேற்பட்ட குட்டிகளைப்...
நேரங்களிலேயே குட்டிகள் ஓடி விளையாட ஆ...
குழந்தைகளும் எடுத்து விளையாடலாம். ஏ...



களில் ஆராய்...
மனித குலத்...
எலிகளைக் கொ...



டங்
ன்றி
டை
ல்,
ரும்
றதமான தாவ
.
வித்தில்லாத
புஷ்பிக்காத
ண்டுப் பாதச்
மைப்பு உண்டு.
லியஸ் (Pileus)
ஒரு வளையம்
னுலஸ் (Annu-
ந்து குல்லாயின்
பல் மடிப்புக்கள் செல்லும். இதற்கு கில்ஸ்
துகளின் வேலையை இது செய்தாலும் இவை
பார்ஸ்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன.
பரவச் செய்கிறது.
இருக்கின்றனவோ, அங்கு விழுந்த ஒரு
றும் பல்கிப் பெருகி வளர ஆரம்பிக்கிறது.
(Hypha) என்று பெயர். இப்படிப் பல
என்று பெயர். இந்த மைசிலியத்தின்
போன்ற சிறுசிறு பந்துகள் உருவாகும்.
ாக வளருகின்றன.
நாய்க் குடைகள் தோன்றினால் அது மந்திரத்
ர்ஸ் என்ற வித்து மூலத்தின் நீண்ட பயணத்
து இப்போது புரிகிறதா? நாய்க் குடைகள்
ளில் இவைகளைப் பயிர் செய்வதும் உண்டு.

என்று பெயர். ஆனால் இவை பன்றிகளு
த் தொடர்பும் கிடையாது. முயல் இனத்
பெயர் காவி (Cavy) கொறித்துத் தின்னும்
ரர்கள் புதிய உலகமான அமெரிக்காவுக்குள்
, கொலம்பியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த
ராணிகளை வளர்த்து வந்தார்கள்; சுவைமிக்க
ன்றிகளை ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தி
ர இறைச்சிக்காக எல்லாரும் இதை விரும்பி
லி அல்ல) பத்து அங்குல நீளமும் இரண்டு
கிடையாது. சிறிய, வட்டமான காதுகள்.
ங் கால்களில் மூன்று விரல்களுமுடையது.
. தாவர உணவையே உண்டு வாழுகிறது.
மர்ந்தபடி கொறிக்கும். சுதந்திரமாக வாழும்
இருள் கவியும் வேளைகளிலும், வெளிச்ச
ம்பும். பசுமை யான உணவு ஏராளமாகக்
வையில்லை. வீடுகளில் வளர்க்கப்படும்போது
டும். அப்போது இதற்குத் தண்ணீர் தேவை.
முறை குட்டி போடக் கூடியது. இரண்டி
பாடும் குணமுடையது. பிறந்த சில மணி
ம்பித்து விடும். மிக்க சாதுவான பிராணி.
ளமாகப் பெருகக் கூடியது. சோதனைச் சாலை
சிகளுக்குப் பெரிதும் பயன்படும் பிராணி இது.
க்குப் பல்வேறு மருந்துகளைத் தயாரிக்கச் சிமை
ண்டு சோதனை நடத்தி முடிவெடுக்கிறார்கள்.

அன்னாசிப் பழம்

அன்னாசிப் பழத்தை ஆங்கிலத்தில் 'பைன் 'ஆப்பிள்' என்பார்கள். பைன் என்ற மரத்தின் கொட்டையைப் போல் இதன் தோற்றம் இருப்பதாலும், பல சிறு சிறு ஆப்பிள் பழங்களை அதில் பதித்ததுபோல் இருப்பதாலும் இதற்குப் பைன் ஆப்பிள் என்று பெயரிட்டிருக்கிறார்கள். அன்னாசி என்பது ஒரே ஒரு பழம் என்றுதானே நினைக்கிறீர்கள்? ஆனால் உண்மையில் நெருக்கமாகப் பல பழங்கள் ஒன்று சேர்ந்து உருவாகியுள்ள ஒரு பழம் அன்னாசி. பழத்தின் நடுத் தண்டிலிருந்து சிறு சிறு பழங்கள் தோன்றி ஒட்டு மொத்தமாக ஒரே பழம்போலத் தெரிகிறது. இப்பழத்தின் தாயகம் தென் அமெரிக்கா. ஸ்பானிஷ்காரர்கள் இதை அங்கிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு போனார்கள். பல ஆண்டுகள் ஐரோப்பாவின் பணக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் கதகதப்பான சூழ்நிலையில் இதை மிகக் கவனமாகப் பயிரிட்டு வந்தார்கள். டாம்பீகமான பொருளாக மதிக்கப்பட்ட இதை நாளாவட்டத்தில் உலகின் பலவேறு உஷ்ண மண்டலங்களிலும் ஏராளமாகப் பயிரிடப்படவே இதன் மவுசு குறைந்தது, கதகதப்பான கண்ணாடி அறைகளுக்குள் வளர்க்கும் வழக்கமும் மறைந்தது.

மேற்கு இந்தியத் தீவுகள், புளோரிடா, ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதி, ஹாவாய், ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் இப்போது அன்னாசி ஏராளமாகப் பயிராகிறது. மூன்றடி உயரம் வளரும் இத்தாவரம் வருஷத்தின் எந்தப் பருவத்திலும் பலன் தரக் கூடியது. ஒரு தடவை பலன் கொடுத்ததும் (பழம் தோன்றியதும்) வேர்ப்பகுதியில் புதிய குருத்துத் தோன்றும், அடுத்த அறுவடைக்கு. ஒரு தாவரம் பல வருஷங்கள் வாழ்ந்து பலன் கொடுத்துக் கொண்டிருக்கும். அன்னாசித் தாவரத்தின் இலைகளிலிருந்து ஒரு வகை நார் தயாரித்துத் துணி நெய்கிறார்கள். அன்னாசியை விதைகளைக் கொண்டு விளைவிப்பது அபூர்வம். பதியன் போட்டே விளைவிக்கிறார்கள். நீர் தேங்கும் நிலம் அன்னாசிச் சாகுபடிக்கு ஏற்றதல்ல. மணற்பாங்கான நிலம் வேண்டும். அதிக வெப்பமும் பனியும் இதன் வளர்ச்சியைப் பாதிக்கும்.



அன்பளிப்பு

'ஜென்'

'பள்ளி இறுதித் தேர்வுக்குப் பணம் கட்ட நாளைதான் கடைசி நாள்' என்று பள்ளித் தலைமை ஆசிரியர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

ராமு இன்னும் பணம் கட்டவில்லை. தவியாய்த் தவித்தான்.

வகுப்பில் அவன்தான் முதல் மாணவன்.

இருந்து என்ன செய்ய? பணம் கட்டினால்தானே தேர்வு எழுத முடியும், திறமையைக் காட்ட முடியும்!

தாய் தந்தையற்ற ராமு அந்த ஊருக்கு வெளியே வயதான தன் பாட்டியுடன் ஒரு குடிசையில் வசித்து வருகிறான். எழுபது வயதை எட்டிப் பிடிக்கும் பாட்டியினால் என்ன சம்பாதிக்க முடியும்?

நிலக் கடலையை வறுத்து ஒரு கூடையில் போட்டு வைத்திருப்பாள் பாட்டி. பள்ளி முடிந்தவுடன் நிலக் கடலைக் கூடையை எடுத்துக் கொண்டு அந்த ஊரில் உள்ள டூரிங் டாக்கீஸ் முன்புறம் ஓர் ஓரமாக அமர்ந்து வியாபாரம் செய்வான் ராமு.

அவன் வியாபாரம் செய்யும் போது அவனோடு படிக்கும் மாணவர்கள் அப்பக்கம் வருவார்கள். சிலர் அவனைக் கண்டும் காணாதது போல் போய்விடுவார்கள். இன்னும் சிலர் அவன் அருகே வந்து கேலி செய்வார்கள்.

நமது ராமு அவற்றைக் கொஞ்சமும் சட்டை செய்யமாட்டான். தொழில் செய்து பிழைப்பதில் என்ன தவறு?

வியாபாரம் நடக்காத போது இடையிடையே கையோடு கொண்டு வந்திருக்கும் பாடப் புத்தகத்தைக் கருத்தோடு படித்துக் கொள்வான்.

இரவு எட்டு மணி வரை வியாபாரம் செய்தால் ஒரு ரூபாயிலிருந்து ஒன்றரை ரூபாய் வரை லாபம் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டுதான் அந்த இரண்டு ஜீவன்களும் வாழ்ந்து கொண்டிருந்தன. அப்படி இருக்க மொத்தமாகப் பதினைந்து ரூபாய்க்கு எங்கு போவது?

இன்று ராமு சோர்வோடு வீட்டுக்கு வந்தவன், ''பாட்டி! நிலக் கடலையைக் கொடு. கொட்டகைப் பக்கம் போய் வருகிறேன்'' என்றான்.

பாட்டியிடமிருந்து சோகஒலி வந்தது. ''கண்ணு, நிலக்கடலைக்காரர் கடன் தர முடியாதுன்னுட்டார்.... பழைய பாக்கி நிக்குதாம்.''

ராமுவுக்குப் பெரிய அதிர்ச்சி, உள்ளதுக்கும் வழியில்லை.

தலையைப் பிய்த்துக் கொண்டான் ராமு. ஒரே சிந்தனை. பணத்துக்கு என்ன செய்வது?

அவனுக்குச் சில பணக்கார நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் பணம் கேட்டால் கிடைக்கும். ஆனால் ராமுவுக்கு ஏனோ அது பிடிக்கவில்லை.

மற்றொரு யோசனை திடீரென்று உதித்தது அவனுக்கு.

யோசிக்க யோசிக்க அந்த நேரத்தில் அதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது. மனத்தைத்தேற்றிக்கொண்டு வேகமாக நடந்தான்.

வெகு விரைவில் குடிசையை அடைந்த ராமு உள்ளே நுழைந்து தனது ஒரே பெட்டியைத் திறந்தான்.



அதில் பல புத்தகங்கள் இருந்தன. அவைகள் அவன் பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி முதலியவற்றில் பரிசாகப் பெற்ற கவிதை, கட்டுரை, விஞ்ஞான சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.

அவைதான் எத்தனை உயர்ந்த புத்தகங்கள்! எத்தனை பெரிய செல்வம்! எத்தனை முறை அவற்றைப் படித்துச் சுவைத்திருப்பான்? இவற்றையா விற்பது? வேறு வழி....?

''ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள். உயர்ந்த புத்தகங்கள் அரிது அரிது, கிடைப்பதரிது.''

கடலை விற்கும் இடத்தில் புத்தகக் கடை விரித்துக் கூவிக் கொண்டிருந்தான் ராமு. கூட்டம் சேர்ந்தது. புத்தகங்களை மக்கள் பார்த்தார்கள். பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் யாரும் வாங்கவில்லை.

கூட்டத்திலிருந்து ஒருவர், ''ஏம்பா, குமாரி கோகிலாவைப் பற்றிப் புத்தகம் இருக்கா?''

ராமுவுக்கு அது என்ன புத்தகம் என்று புரியவில்லை.

''யாருங்க அது குமாரி கோகிலா?'' ராமு இப்படிக் கேட்டதுதான் தாமதம் கூட்டத்தில் ஒரே சிரிப்பு.

''அட பைத்தியக்காரா! சினிமாக் கொட்டகை முன்னால் வந்து வியாபாரம் செய்யறே, கோகிலாவைத் தெரியாதா? அவுங்க பெரிய சினிமா ஸ்டாரு !''

கூட்டத்திலிருந்து ஒருவர் கொடுத்த பதில் ராமுவால் சகிக்கக் கூடியதாக இல்லை. இதே போன்று பலர் பல சினிமா, நடிகர் நடிகை புத்தகங்கள், படங்கள் தான் வேண்டும் என்றார்கள். யாரும் அவன் வைத்திருந்த அறிவு நூல்களைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

முதல் ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. இப்போது ராமுவைச் சுற்றி யாரும் இல்லை. அவனுக்குக் கண்கள் கலங்கின. இனி என்ன செய்வது ? விடிந்தால் பணம் கட்ட வேண்டும்.

அப்போதுதான் அது நடந்தது.

யாரோ ஒருவர் அங்கு வந்தார். அவரை இதற்குமுன் அந்த ஊரில் அவன் பார்த்ததில்லை. ராமுவை அவர் வினோதமாகப் பார்த்தார். பிறகு பரப்பி வைத்திருந்த புத்தகங்களைப் பார்த்தார்.

''தம்பி, இந்தப் புத்தகங்கள் அனைத்தையும் எடுத்துக் கொள்ளுகிறேன். என்ன விலை சொல்கிறாய்?'' என்றார்.

ராமுவுக்குத் தலைகால் புரியவில்லை. என்ன பேசுவதென்று தெரியவில்லை.

'' உண்மையாகவா சார், கேட்கிறீர்கள்?'' என்றான் வியப்புடன்.

''உண்மையாகத்தான் தம்பி. இப்படியே எல்லாவற்றுக்கும் என்ன விலை?''

'' ஐயா, இப்புத்தகங்கள் லட்ச ரூபாய் மதிப்புள்ளவை. ஆனால் இப்போது பதினைந்து ரூபாய் ஐம்பது பைசா எனக்குத் தேவை. இப்பணத்தைக் கொடுத்துவிட்டு எல்லாப் புத்தகங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்.''

''என்ன கணக்குத் தம்பி அது, பதினைந்து ரூபாய் ஐம்பது பைசா !''

'' பதினைந்து ரூபாய் என்னுடைய தேர்வுக் கட்டணத்துக்காக, ஐம்பது பைசா பசியோடு இருக்கும் என் பாட்டிக்குப் பலகாரம் வாங்குவதற்காக.'' தழுதழுத்த குரலில் ராமு கூறினான்.

வந்தவர் அவன் கையில் இருபத்தைந்து ரூபாயை வலுக் கட்டாயமாகத்



திணித்துவிட்டுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அடுத்த நாள் பதினைந்து ரூபாயைக் கையில் வைத்தபடி தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந்தான் ராமு.

தலைமை ஆசிரியர் அவனைப் புன்முறுவலுடன் வரவேற்று ரூபாயை எழுத்தரிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.

எழுத்தரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும் தலைமை ஆசிரியர் அறைக்கு வந்தான்.

வந்தவன் தலைமை ஆசிரியர் மேசை மேல் வைக்கப்பட்டுள்ள தனது புத்தகங்களைக் கண்டு அசந்து விட்டான்.

அவை அனைத்தும் நேற்று அவனால் விற்கப்பட்ட அவனுடைய புத்தகங்கள் தாம்.

தலைமை ஆசிரியர் கூறினார்.

'' ராமு! உன்னுடைய சுயமரியாதையைப் பாராட்டுகிறேன். நேற்று நீ புத்தகங்கள் விற்கும்போது தற்செயலாக அப்பக்கம் வந்த நான் கூட்டத்தோடு கூட்டமாக நின்று உன்னைக் கவனித்தேன். சிறிது நேரத்தில் உன் நிலையைப் புரிந்து கொண்டேன். நானாக வந்து வாங்காமல் என் வீட்டுக்கு வந்திருந்த உறவினர் மூலம் உன் புத்தகங்களை வாங்கி வரச் சொன்னேன்.''

இவ்வாறு கூறிய தலைமை ஆசிரியர், ''இதோ, இவை எனது அன்பளிப்பு. ம்.... மறுக்காதே, பெற்றுக் கொள் '' என்று மேசை மீதிருந்த புத்தகங்களை எடுத்து ராமுவை நோக்கி நீட்டினார்.

உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்பட்ட ராமு இரு கரங்களையும் நீட்டித் தலைமை ஆசிரியரிடமிருந்து புத்தகங்களைப் பெற்று அவற்றைத் தனது மார்புடன் அணைத்துக் கொண்டான். அவன் மனம் இப்படிக் 'கூறியது.' 'எக்காரணத்தைக் கொண்டும் இவற்றை மீண்டும் விற்க முனையக் கூடாது.'



நெட்டையர் சங்கம்

குட்டை மனிதர்கள் என்றாலும், நெட்டை மனிதர்கள் என்றாலும், பிறரது பரிகாசத்துக்கு ஆளாக நேரிடுகிறது. பிறர் கேலி செய்வதையும் பரிகாசம் செய்வதையும் ''எதிர்த்துப் போரிடுவதற்கென'' ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் மியூனிக் நகரில் ''நெட்டையர் சங்கம்'' இயங்கி வருகிறது. வரிச் சலுகை பெறுவதும், அரசின் ஆதரவைப் பெறுவதுமே இதன் நோக்கம். அந்தக் காலத்தில் நெட்டையர்களுக்கு ஏற்ற, ''ரெடிமேட் ஆடைகள்'' கிடைப்பது கடினம். ஆனால் இப்போது நெட்டையான ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்ற 'ரெடிமேட்' ஆடைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. உயரமானவர்களுக்குத் தகுந்த வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவியர்களைத் தேடித் தருவதிலும் இந்தச் சங்கம் உதவி செய்கிறது. — யு. பி. எஸ்.

'ரயில் வழக்கு!'

'டன்' (Ton) என்ற ஆங்கில வார்த்தையை ரயில்வே இலாகாவில் மட்டும் *'TONNES'* என்றுதான் குறிப்பிடுவார்கள்.

ரயில்வே இலாகாவில் சிவப்பு முக்கோணம் தற்காப்பே முதற் கடமை என்பதைக் குறிக்கும்.


ரயில் இன்ஜின் டிரைவர், கார்டு, ஸ்டேஷன்மாஸ்டர் ஆகிய இந்த மூவர்கள்தான் ரயில்வேயில் மிகவும் முக்கியமானவர்கள். இவர்களை ரயில்வேயின் *Big Three* என்பார்கள்.

ரயில்வே இலாகாவினர் நடத்தும் 'தட்சிண ரயில்வே செய்திக் கடிதம்' என்ற பத்திரிகையில் ஒரு வரிகூட விளம்பரம் கிடையாது.

நம் நாட்டில் தயாராகும் ஒரு நீராவி ரயில் இன்ஜின் விலை ஐந்துலட்சம் ரூபாய்; எலெக்ட்ரிக் ரயில் இன்ஜின் விலை பதினைந்து லட்சம் ரூபாய்; ஒரு டீசல் ரயில் இன்ஜின் விலை இருபத்தேழு லட்சம் ரூபாய் ஆகும்.


ரயில்வேயில் உறுப்புக்களை இழந்து கிடக்கும் வாகன்களையும், பழுது அடைந்த இயந்திரங்களையும் 'ரிப்பேர்' *(Repair)* என்று சொல்வது கிடையாது. 'சிக்' என்றுதான் அழைப்பார்கள்!

—பொன்மலை பரிமளம்



வண்டிக்குக் காத்திருக்கும் வக்கணையை என் சொல்வோம்....?

"பாதை கடக்கலாமா, படுத்து உறங்கலாமா ?"



"கையிலெடுத்தாக் காசுதான், வாயிலே போட்டாக் கற்கண்டுதான் !"




"அப்பப்பா ! என்ன தாகம்.....?"

புகைப் படங்கள் : திலீப் பானர்ஜி



ரொம்பத்தான் நாக்கு நீளம்...



அதிசயத் திருட்டு



பாலம் சுந்தரேசன்

மாறவர்மன் கோபத்துடன் இங்கு மங்கும் உலாவினன். அவனுடைய கண்கள் கோபத்ினல் ஜ்வலித்தன.

'' இந்த வருஷம் விக்கிரமனுக்காயிற்று, எனக்காயிற்று பார்த்துவிடுகிறேன்! எப்படியாவது பிரபாகரவர்மனின் பரிசைக் கவர்ந்தே திருவேன் '' என்று கர்ஜித்தான் மாறவர்மன்.

''விக்கிரமன் அதி சாமர்த்தியசாலி. உங்களைப் பிடிக்க அவன் தீவிரமாக முயன்று வருகிறன். சிங்கத்தின் வாயில் வலுவில் போய் அகப்பட்டுக் கொள்ளாதீர்கள்'' என்று மன்றுடினுள் மாயா, அவன் மனைவி.

அட்டகாசமாகச் சிரித்தான், மாறவர்மன். '' சிங்கத்தின் குகைக்கே போகப் போகிறேன், மாயா! பயப்படாதே, என்னை அந்த விக்கிரமனல் பிடிக்க முடியாது. என் திட்டத்துக்கு உன் உதவி தேவை. வா, சொல்லுகிறேன்.''

அன்று ஆடிப் பெருக்கு. பிரபாகரவர்மன் கப்பம் கட்ட வருகிற நாள். பேரரசன் சிம்மசேனனின் விசுவாசம் மிக்க சிற்றரசர்களில் பிரபாகரவர்மன் ஒருவன். கப்பத் தொகையுடன் தன் அன்பின் அடையாளமாக மிக விலை உயர்ந்த அழகிய ஒரு நகையைச் சிம்மசேனனுக்கு அளிப்பது அவன் வழக்கம். கலையழகுடன் விளங்கும் பிரபாகரவர்மனின் பரிசுகளை அரசன் மிகவும் மதித்தான். அந்த வருடம் பிரபாகரவர்மனின் பரிசு மற்ற எல்லா ஆண்டுகளையும்விட மிக அழகாகவும் விலை உயர்ந்ததாகவும் இருக்கப் போகிறது என்ற செய்தி எட்டியிருந்ததால் சிம்மசேனன் தன் அன்புக்குகந்த சிற்றரசனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தான்.

மந்திரி விக்கிரமர் மிக எச்சரிக்கையுடன் இருந்தார். பிரபல கொள்ளைக்காரன் மாறவர்மன், பிரபாகரவர்மனின் பரிசைக் கவர முயற்சி செய்வான் என்று அவர் எதிர்பார்த்தார். மாறவர்மன் மிக தந்திரசாலி. அபாரத் துணிச்சல் உடையவன். அவனைப் பிடிக்க விக்கிரமர் செய்த முயற்சிகள் எல்லாம் இதுவரை வெற்றி அடையவில்லை. பிரபாகரவர்மன் அரண்மனைக்குப் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டான். அரண்மனைக் காவல் மிக பலமாக இருந்தது. இன்று சபையில் பலர் முன்னிலையில் சிற்றரசன் பேரரசனுக்குப் பரிசை அளிப்பான். பிறகு அது பொக்கிஷ அறைக்கு எடுத்துச் செல்லப்படும். பொக்கிஷ அறையிலிருந்து எதையும் திருடுவது யாராலும் இயலாத காரியம்.

சபையில் விக்கிரமரின் நம்பிக்கைக்கு உகந்த வீரர்கள் ஆங்காங்கே இருந்தனர். சிம்மாசனத்தின் இடது பக்கத்தில் அரசனுக்கருகில் இருந்த ஆசனத்தில் பிரபாகர வர்மன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். அவன் மடியில் ஒரு சிறிய தந்தப் பேழை இருந்தது. அவனுக்குப் பக்கத்தில் மற்றொரு சிற்றரசரான ருத்திரசிம்மர் அமர்ந்திருந்தார். சிம்மசேனனின் தூரத்து உறவினரான அவர் அரசனை ஏதோ முக்கிய அலுவலாகப் பார்க்க வந்திருந்தார். அவருடைய பெரிய மீசையும் மிகப் பெரிய தலைப்பாகையும் அவருக்கு ஒரு கம்பீரத்தை அளித்தன. இடது கைப் பழக்கம் உள்ளவராதலால் அடிக்கடி இடது கையால் மீசையை உருவிவிட்டுக் கொண்டிருந்தார். மன்னரின் வலது பக்கத்தில் முக்கிய பிரபுவான விஜயசிம்மர் அரசனுக்கருகில் அமர்ந்திருந்தார். குட்டையாகக் குண்டாக இருந்த அவர் சளசளவென்று பக்கத்திலிருந்த பலராமவர்மரிடம் பேசிக் கொண்டிருந்தார். சிவபக்தரான பல

ராமவர்மர் நெற்றியில் திருநீறுடன் காட்சியளித்தார். மீசை இல்லாமல் வழுவழுப்பான அவர் முகத்திலிருந்த ஒரு குறை, அவருக்கு ஒரு கண் குருடு என்பதுதான்.. மற்றும் சில பிரபுக்களும் அமர்ந்திருந்தனர்.

அரசன் வந்து சிம்மாசனத்தில் அமர்ந்ததுமே அனைவரும் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். பிரபாகர வர்மன் மிகப் பணிவுடன் அரசனை வணங்கித் தன் பரிசான தந்தப் பேழையை அளித்தான். அரசன் பரிசை வாங்கி அப்படியே வைத்துவிட்டுப் பிரபாகர வர்மனை அன்புடன் தழுவிக் கொண்டான். பிறகு பேழையைத் திறந்தான். எல்லாருடைய கண்களும் ஆவலுடன் நோக்கின. பேழையினுள் சிவப்புப் பட்டுத் துணியில் பளபளத்தது ஒரு வைர மாலை. அனைவரும் பிரமித்தனர். சிறிய மொச்சைப் பருப்பளவில் ஒரே மாதிரியான முப்பது வைரங்கள் பதிக்கப்பட்டுப் பதக்கத்தில் மிகப் பெரிய ஒற்றை வைரத்துடன் ஜொலித்த அந்த வைர மாலையைக் கண்டு சிம்மசேனனே பிரமித்துப் போனான்.

''பல நாட்களாக, பல தேசங்களிலிருந்து தருவிக்கப்பட்ட வைரங்களிலிருந்து நானே தேர்ந்தெடுத்த வைரங்கள் அவை. யாவுமே நீல நிறக் கதிர்களை மட்டுமே பிரதிபலிக்கக் கூடியவை'' என்றான் பிரபாகரவர்மன்.

''பிரபாகரவர்மரே, உங்கள் அன்பு என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது'' என்றான் சிம்மசேனன் மனம் நெகிழ்ந்து.

பிரபாகரவர்மனுடன் சற்று நேரம் உரையாடிவிட்டு மற்றவர்களுடன் பேசலானான் சிம்மசேனன்.

''ருத்ரசிம்மரே, மிக இளைத்துவிட்டீரே, உடல்நலக் குறைவா ?'' என்று அன்புடன் வினவினான் மன்னன்.

ருத்ரசிம்மர் அரசனை வணங்கி ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

இதற்குள் சபை வாயிலில் ஏதோ பரபரப்பு எழவே அனைவரும் வாயிலை நோக்கினர்.

காவலன் ஒருவன் உள்ளே நுழைந்து பாரசீக தேசத்திலிருந்து வந்துள்ள பிரசித்திபெற்ற அழகு வாய்ந்த நாட்டியக்காரி ஒருத்தி அரசன் முன் ஆட விரும்புவதாகத் தெரிவித்தான்.

''உடனே அழைத்து வா !'' என்று உத்தரவிட்டான் மன்னன்.

கண்ணைப் பறிக்கும் அலங்காரத்துடனும் இணையில்லா அழகுடனும் ஒரு பெண் வந்து அரசனை வணங்கினாள்.



அவனுடன் வந்திருந்த வாத்தியக் காரர்கள் வாத்தியம் வாசிக்க ஆரம்பித் தனர். அழகி ஆடினள். ஆட்டம் என்ருல் இதுவல்லவோ ஆட்டம் ! யாவ ரும் மயங்கினர். அரசனும் மயங் கினன். விக்கிரமர்கூடச் சற்று நேரம் கழித்துத்தான் சுயநிலைக்கு வந்தார்.

''அரசே ! மாலை, வைர மாலை! எங்கே?'' என்று கத்தினர் விக்கிரமர். அரசனும் மற்றவர்களும் அப்போது தான் கவனித்தனர். பேழையினுள் மாலையைக் காணவில்லை. விக்கிரமரின் மூளை தீவிரமாக வேலை செய்தது. யாவ ரையும் ஒரு முறை கூர்ந்து நோக்கினர்.

இதற்குள் அழகி ஆட்டத்தை நிறுத்தி யிருந்தாள். அவளும் அவ ளுடைய கோஷ்டியும் அரசனை வணங்கி விட்டு மெதுவாக வெளியேறலாயினர்.

''காவலரே, சபைக் கதவைத் தாளிடுங்கள். ஒருவரும் வெளியேறக் கூடாது. மிக விலை உயர்ந்த வைர மாலையைக் காணவில்லை. திருடியவன் சபையில்தான் இருக்கிருன்'' என்று ஆணையிட்டார் விக்கிரமர்.

''எல்லோரும் எங்களைக் கவனித் துக் கொண்டிருந்தீர்களே! எங்களுக்கும் இந்தத் திருட்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? மன்னு ! பிறநாட்டுக் கலைஞர்களை அவமானப்படுத்துவது தான் உங்கள் நாட்டு வழக்கமோ ?'' என்று கோபத்துடன் கேட்டாள் அழகி.

விஜயசிம்மர், ருத்ரசிம்மர், பலராம வர்மர், பிரபாகரவர்மர் அனைவரும் நாட்டியக்காரிக்காக மன்னனிடம் ஒரே சமயத்தில் பரிந்து பேச ஆரம்பித்தனர்.

சிம்மசேனனும் விக்கிரமரை நோக்கி, ''விக்கிரமரே, நீங்கள் திர யோசி யாமல் எதையும் செய்யமாட்டீர்கள் ! இருப்பினும் பாரசீகத்திலிருந்து நமது சபைக்கு வந்திருக்கும் இவளை.....'' என்று இழுத்தார்.

''மன்னு ! சற்றுப் பொறுங்கள். நம் எல்லாருடைய கண்ணெதிரில் திருட்டுப் போயிருக்கிறது. திருட்டுப் போனது உங்கள் அன்புக்குகந்த பிரபாகரவர்ம ரின் அன்பளிப்பு. மிக மதிப்பு வாய்ந்த வைர மாலை. உண்மைத் திருடனைக் கண்டு பிடிக்க.....'' என்று சொல்லிக் கொண்டே போன விக்கிரமர் திடீ ரென்று திரும்பி, ''அதோ ! பாம்பு, மிகப் பெரிய கருநாகம், அதோ போகிறது.... ருத்ரசிம்மரே, உங்கள் கால்களுக்கடியில்.... எழுந்திருங்கள்!'' என்று பலமாகக் கத்தினர்.

ருத்ரசிம்மர் திடுக்கிட்டு வாளை உருவிக் கொண்டே கீழே அங்கேயும், இங்கேயும் நோக்கினர்.

அருகில் வேகமாக ஓடி வந்த விக்கிரமர் சற்றும் எதிர்பாராதவித மாக ருத்ரசிம்மரின் மீசையைப் பற்றிப் பலமாக இழுத்தார். மீசை கையுடன் வந்துவிட்டது.

சிம்மசேனன் பரபரப்புடன் எழுந் தான். சபையில் ஒரே சலசலப்பு. மந்திரி தம் ஆட்களுக்குச் சைகை செய்யவே காவலர் நாட்டியக்காரி, அவள் கோஷ்டி, ருத்ரசிம்மர் முதலிய வர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மன்னரை வணங்கிய விக்கிரமர், ''அரசே, பிரபல கொள்ளைக்காரர் மாற வர்மர் அவர்கள் தங்கள் சபைக்கே வருகை தந்திருக்கிருர்!'' என்ருர்.

ருத்ரசிம்மர் வேடத்திலிருந்த மாற வர்மன் கோபத்துடன் வாளை ஓங்கி னன். தயாராக இருந்த காவலர் அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித் துக் கொண்டு விட்டனர்.

'' அந்த நாட்டியக்காரியையும் அவ ளுடைய ஆட்களையும் பிடித்துக் கட்டுங் கள்'' என்று உத்தரவிட்ட விக்கிரமர், அதே சமயம் மாறவர்மனின் அங்கியி லிருந்து வைர மாலையையும் வெளியே எடுத்தார். ''விக்கிரமரே !, யாவரும் குழப்பத்தில் உள்ளனர். விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டு உள்ளீர்கள்'' என்ருன் சிம்மசேனன். தலைவணங்கிய விக்கிரமர் சொல்ல ஆரம்பித்தார்.

''மாறவர்மன் பிரபாகரவர்மரின் பரிசை ஒவ்வொரு வருடமும் கவர முயற்சி செய்வான். இவ்வருடமும் அவ் வாறே செய்வான் என்று எதிர்பார்த் தேன். ஆனல் துணிச்சலுடன் தங்கள் சபைக்கே வருவான் என்று எதிர் பார்க்கவில்லை. அவன் மாறு வேடங்கள் புனைவதில் திறமைசாலி என்று தெரி யும். இருப்பினும் முதலில் ருத்ரசிம்மர் வேடத்திலிருந்த அவனை நான் சந் தேகிக்கவில்லை. அவருடைய பிரசித்தி பெற்ற மீசையும் தலைப்பாகையும் அவ ரது பிரபலமான இடது கைப் பழக்க மும் என் கண்களை மறைத்துவிட்டன. தத்ரூபமான நடிப்பு. தாங்கள் ருத்ர சிம்மர் இளைத்திருப்பதாகக் கூறினீர்கள். அப்போதே எனக்குச் சந்தேகம் ஏற்பட் டிருக்க வேண்டும். ஆனல் அதைப் பற்றி யோசிக்குமுன் அந்த நாடகக் காரி உள்ளே நுழைந்துவிட்டாள். மாறவர்மனின் முன்னேற்பாடு. மாற வர்மா, அது உன் மனைவி மாயா தேவியா ?'' என்று மாறவர்மனைக் கேட்டார் விக்கிரமர். காவலர் பிடியி லிருந்து திமிறிக் கொண்டிருந்த மாற வர்மன் பற்களைக் கடித்தான்.

''யாவரும் ஓரிரண்டு நிமிடங்கள் நடனக்காரியைப் பார்த்துப் பிரமித்து விட்டோம். அது போதுமே, ஒரு கைதேர்ந்த திருடனுக்கு'' என்றார் விக்கிரமர்.

''விக்கிரமா, கடைசியில் என்னைப் பிடித்துவிட்டாய். உம், என்னை எப்படி இனங் கண்டு கொண்டாய்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான் மாறவர்மன்.


'' மாறவர்மா, சொல்லுகிறேன். திருட்டுப் போனவுடன் சபையில் எல்லோரையும் ஒரு முறை நோக்கினேன். அனைவரும் அவரவர் இருக்கையில் இருந்தனர். வைர மாலை இருந்த பேழை அரசனின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சட்டென்று எடுத்துக் கொண்டு பழையபடி இருக்கையில் அமரக்கூடிய தூரத்தில் இருந்தவர்கள் நீ, பிரபாகரவர்மர், விஜயசிம்மர், பலராமவர்மர் ஆகிய நான்கு பேர்தான். நால்வருமே அப்பழுக்கற்ற நடத்தை உடையவர்கள். யாரைச் சந்தேகிப்பது? நால்வரில் பிரபாகர வர்மர் எடுத்திருக்க முடியாது. அதனால் மற்ற மூவரையும் உற்று நோக்கினேன். விஜய சிம்மர், பலராம வர்மர் இருவர் மாதிரி வேடம் போடுவது எளிதன்று. ஆனால் ருத்ர சிம்மர்! அவருடைய முகத்தை, மீசையும், தலைப்பாகையும் பாதி மறைத்துக் கொண்டிருந்தன. அவர் மாதிரி வேடம் போடுவது எளிதில்லை என்றாலும் முடியாத விஷயமில்லை, மாறு வேடங்களில் சிறந்த ஒருவனுக்கு. அதனால் ருத்ர சிம்மர் வேடத்திலிருந்த உன்மேல் சந்தேகம் வந்து விட்டது. ஆயினும் அந்த இடது கைப் பழக்கம்!''

''சோதிப்பதற்காகத்தானே 'கருநாகம்' என்று பயமுறுத்தினீர்கள்!'' என்று பலமாகச் சிரித்துக் கொண்டே கேட்டான் சிம்மசேனன்.

''ஆம், தன் உயிருக்கு ஆபத்து என்று வரும்போது மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறான் மனிதன். அதனால் தான் ''கருநாகம்'' என்று கத்தினேன். திடுக்கிட்ட ருத்ரசிம்மர் வேடத்திலிருந்த மாறவர்மன் வலது கையால் வாளை உருவினான். நான் அவன் மீசையை உருவினேன்.'' என்று பலமாகச் சிரித்தார் விக்கிரமர்.

''பிடிபட்டான் மாற வர்மன். நன்று விக்கிரமரே மிக நன்று!'' என்று பலமாகச் சிரித்தவாறே அவரைப் பாராட்டினான் பேரரசன் சிம்ம சேனன்.





கொக்கு

"கோமதி"

கொக்கு வெள்ளைக் கொக்கு! — குளக்
கரையி லிருக்கும் கொக்கு!
சிக்கும் சின்ன மீன்கள் — என்ற
சிந்த னையில் நிற்கும்!

காலு ரெண்டும் நெட்டை — அதன்
கழுத்து நீண்டிருக்கும்
வாலுமட்டும் குட்டை — அதன்
வாயும் ரொம்பத் தட்டை !

ஒற்றைக் காலி லேயே — கொக்கு
உயர்ந்த தபசு செய்யும் !
பற்றிக் கொண்டு மீனை — அது
பறந்து வானில் செல்லும்!

மக்குப் போல இன்றி — நல்ல
மதிப்புப் பெறவே தம்பி
கொக்குப் போலக் கூர்த்த — மதியைக்
கொள்ள வேணும் தம்பி!



கொக்குப் பாட்டி!


'குன்றக்குடியான்'


கூனக் கழுத்துக் கொக்குப் பாட்டி
குந்தி இருந்ததாம் — நல்ல
கூர்மையாக மூக்கைத் நீட்டிக்
கூனி இருந்ததாம்.

மீனின் குஞ்சுக் கூட்டம் ஒன்று
மேய வந்ததாம் — அது
மேயு மட்டும் கொக்குப் பாட்டி
மெதனம் ஆனதாம்.

தூங்குதென்று கெண்டை ஒன்று
துள்ளி வந்ததாம் — நல்ல
தோது கண்டிருந்த பாட்டி
சூது வென்றதாம்.

பாங்கிருந்த குஞ்சுக் கூட்டம்
பறந்து சென்றதாம் — மேற்
பார்வையாலே சாது போன்றோர்
பலமுங் கண்டதாம்.





மந்திரக் கம்பளம்

வாண்டுமாமா

விசித்திரபுரியின் இளவரசன் எல்லாக் குழந்தைகளையும் போலவே நாளொரு அழுகையும் பொழுதொரு சிரிப்புமாக வளர்ந்து வந்தான். இளவரசனின் பெயர் தெரியுமல்லவா உங்களுக்கு? அவன் அப்பா மந்தஹாச மகாராஜா பெயர் வைத்தாரே நினைவில்லையா? முனிவர்களும் தவயோகிகளும் சித்தர்களும் வந்து கூடிக் குழுமிய அந்தக் கோலாகலத்திலே அதை மறந்து போனீர்களா ? இளவரசனுக்கு இட்ட பெயர் என்ன என்னவென்று மந்தஹாச மகாராஜா மறந்து போகலாம். ஆனால் நீங்கள் மறக்கலாமா? மறக்கவில்லை அல்லவா ? ஆம், கீர்த்திவர்மன் — அதுவேதான் !

குழந்தை இளவரசன் கீர்த்திவர்மன் வெகு விரைவிலேயே பேச ஆரம்பித்தான். அப்போதுதான் அவன் மற்றக் குழந்தைகளிலிருந்து மாறுபட்டவன் என்பது தெரிந்தது. குழந்தையைக் கவனிக்கும் பொறுப்புடைய தாதிகளுக்குத்தான் அந்த முதல் அதிர்ச்சி ஏற்பட்டது. எந்தச் செயலுக்கும் ஏன், எப்படி, எதனால் என்று வினா எழுப்பி விடை கிடைத்த பிறகுதான் சமாதானமடைவான் கீர்த்தி.

சாப்பிடச் சொன்னால் 'சாப்பிடாவிட்டால் என்ன?' என்று கேட்பான். குளிக்க வேண்டும் என்றால் 'எதற்காகக் குளிக்க வேண்டும்?' என்று விளக்கம் தரச் சொல்லுவான். ஆனால் அதே சமயம் சரியான பதில் விளக்கமாகக் கிடைக்குமானால் சமாதானமடைந்து சாதுவாக நடந்து கொள்ளுவான். தவறான விளக்கத்தையோ குழப்படியான பதில்களையோ அந்தக் குழந்தையிடம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. அவனுக்கு எது உண்மை, எது பொய் என்று தெரியும். காரணம் அவன் அதி புத்திசாலியாக விளங்கும்படி அந்தக் குடுகுடு கிழவரான முனிவர் ஆசீர்வதித்துப் போனாரில்லையா? ரொம்பவும் பெரியவர் அவர். தவ வலிமை மிக்கவர். அவர் ஆசீர்வதித்தால் அப்படியே நடக்கும். நடந்து கொண்டு வந்தது. கீர்த்திவர்மன் எல்லாரையும்விட அறிவாளியாக விளங்கினான். இது பலருக்குச் சங்கடமாகவும் இருந்தது.

2




மந்தஹாச மகாராஜாவேகூட முகம் சுளித்தார், தம் மகனுடைய அறிவாற்றலைக் கண்டு. 'அதிகப் பிரசங்கித்தனம்' என்று அதற்கு விளக்கமும் கொடுத்தார். இளவரசனுக்கு எட்டு வயதான போது, ''அப்பா! அரசர்கள் அரண்மனையிலும் ஏழைகள் குடிசையிலும் வசிப்பானேன்?' என்று கேட்டான். இப்படி வினா எழுப்பும் மகனை எந்த ராஜாதான் விரும்புவார்? அவன் கேட்டதோ எத்தனையோ நூற்றாண்டுகளாக யாராலும் விளக்க முடியாத ஒரு வினா. மந்தஹாசருக்கா விடை தெரியப் போகிறது?

அறுசுவை உண்டிகளும், விதம் விதமான பட்சணங்களும் பானங்களும் பழ வகைகளும் வேண்டும் மந்தஹாசருக்கு. உணவு வேளையின் போது ரொம்பவும் உற்சாகமாக இருப்பார் மன்னர். சாப்பாட்டுப் பிரியர். ரசித்து உண்பார். ஒரு நாள் கீர்த்தி கேட்டான். ''இத்தனை வகை வகையான உணவுகளைச் சாப்பிடுபவர்கள்தான் மன்னர்களா? முழு வயிற்றுக்கு ஒரு வேளை உணவு கிடைக்காதவர்கள்தான் மக்களா?''

இப்படியெல்லாம் குத்தலான கேள்விகளைக் கேட்கும் மகனிடம் கோபமும் அதிர்ச்சியும் அடைந்தார் மன்னர். இளவரசனின் காதுகளைப் பிடித்துத் திருகிக் கொண்டே, ''இப்படியெல்லாம் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதே, தெரிந்ததா? ரொம்பவும் புத்திசாலியாக இருப்பதும் ஆபத்துத்தான். புரிஞ்சுக்கோ?'' என்றார். தம் மகன் இப்படிப் புரட்சிகரமான அதிபுத்திசாலியாக இருப்பதற்கு அந்தக் குடுகுடு கிழவரான முனிவரின் ஆசிர்வாதம்தான் என்பதையும் உணர்ந்தார். முனிவர்களையும் யோகிகளையும் சித்தர்களையும் ரத்னவதி வெறுத்து ஒதுக்கியதினால் வந்த வினைதான் இது. முறையாக அவர்களை அழைத்து மரியாதை செய்திருந்தால் எல்லாமே நல்லபடியாக இருக்கும். அவர்களாக வந்து ஆசி வழங்கிவிட்டுப் போயிருப்பதால் கீர்த்திக்குக் குதர்க்கமான எண்ணங்களும் எழுச்சிகளும் ஏற்பட்டிருப்பதைப் போல் இன்னும் என்னென்ன குளறுபடிகளெல்லாம் நடக்குமோ என்று கவலைப்படலானார் மன்னர்.

கீர்த்திவர்மன் சிவந்துவிட்ட தன் காதுகளைத் தடவிக் கொண்டே, ''என்னுடைய கேள்விகளுக்கு நீங்கள் உங்களுடைய பலாத்காரத்தினால் விடையளிக்கக் கூடாது அப்பா!'' என்றானே பார்க்கலாம்!

அரண்மனைக்குள் மட்டும் அல்லாமல் நாட்டு நிர்வாகத்திலுள்ளோரிடமும் நாட்டு மக்களிடமும்கூடக் கீர்த்தி சகஜமாகப் பழகலானான். அதனால் அவர்களுடைய அன்பைப் பெறுவதற்குப் பதில் வெறுப்பைத்தான் சம்பாதித்துக்கொண்டான். அரண்மனை மடப்பள்ளிக்குள்




போவான். தலைமைச் சமையற்காரர் இளவரசனைக் கண்டதும் ஓடோடி வந்து வரவேற்பார். கீர்த்தி அன்றைய தயாரிப்புக்களைப் பற்றிக் கேட்பான். அவர் சொல்லுவார். அவன் உடனே இன்னின்ன சாமான்களைக் கொண்டு இப்படி ஓர் உணவு வகை செய்யலாமே என்று விளக்குவான். அது மட்டுமல்ல. தானே கரண்டி பிடித்து அடுப்படியில் அமர்ந்து அதைத் தயாரித்துக் கொடுத்துவிட்டுத்தான் நகருவான். பிரதம சமையல்காரருக்கு எப்படி இருக்கும்? வெளியிலே சிரித்துக்கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் 'இந்தச் சின்னப் பயல் நமக்குத் தயாரிப்பு முறை கற்றுக் தருவதாவது' என்று கர்வத்துடன் கறுவுவார். ஆனால் இளவரசன் செய்து கொடுத்த பதார்த்தம் உண்மையிலேயே அருமையான சுவையோடு கூடியதாக இருக்கும். அதையும் அவர் மனத்துக்குள் பாராட்டுவார். ஆனால் அதையும் மீறி 'இந்தச் சின்னப் பயல்' என்ற சினம்தான் மேலோங்கும்.

கத்திச் சண்டை பழக்கித் தருபவர், மற்போர் வீரர், குதிரையேற்றம் சொல்லிக் கொடுப்பவர் எல்லோருக்குமே கீர்த்திவர்மன் புதிய புதிய முறைகளையும் உத்திகளையும் கற்றுக் கொடுத்து அவர்கள் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டான். ஆனால் அவன் எது செய்தாலும் அது எவ்விதக் குறையும் இல்லாதபடிக்கு இருக்கும். ஆனால் பாராட்ட வேண்டியதற்குப் பதில் 'இவன் என்ன நமக்குக் கற்றுக் தருவது?' என்ற எண்ணத்தில் கீர்த்தியிடம் பகைமையே கொண்டார்கள்.

கல்வி கற்றுக் தரும் ராஜகுருவுக்குப் பல பாடங்களில் அவரே வியக்கும்படி விளக்கம் தரலானான். அவனது அபாரமான வாதத் திறமையையும் நுண்ணறிவையும் விசாலமான புத்தியையும் கண்டவர்கள் மனத்துக்குள் வியந்தார்கள். அதே சமயம் வெறுக்கவும் செய்தார்கள். வெறுப்பின் காரணம், அவன் வயது. இத்தனை சின்ன வயதில் இப்படி எல்லாரையும் விழுங்கும் வகையில் வல்லவனாக இருக்கிறானே என்ற பொறுமைதான்.

நாட்டு மக்களுடன் அவர்களுள் ஒருவனாகப் பழகுவான் கீர்த்தி. அவர்களுடைய உழைப்புக்குக் கைகொடுப்பான். உதவிகள் செய்வான். இதனால் நாட்டு மக்களின் நல்லபிமானத்தைப் பெற்





செருப்புக்குள்ளே கல்லும், செவிக்குள்ளே ஈயும், கண்ணினுள்ளே தூசியும், காலில் முள்ளும், வீட்டில் கலகமும் அளவில் எத்தனை சிறியதாயிருந்தாலும் விசேஷத் துன்பத்தைத் தருவனவாகும். —கவி வேமன்னு

ஒழுக்கமற்றவனை நண்பனாகக் கொள்ளாதே. —கன்பூஷியஸ்

றான். இது மன்னருக்கும் மற்றவர்களுக்கும் பிடிக்கவில்லை. அவனைக் கண்டிக்கவும் முடியவில்லை. சராசரியான ஓர் இளவரசனைப் போலிருந்தால் அவனைக் கண்டிக்கலாம். ஆனால் கீர்த்திவர்மனோ எல்லாரையும்விடப் புத்திசாலியாக இருந்ததினால் யாருக்குமே அவனுடன் வாதாடத் தைரியம் இல்லை. மற்றவர்களுக்குத் தெரிந்திருப்பதைவிட எல்லா விஷயங்களுமே அவனுக்கு அதிகமாகத் தெரிந்திருந்தது. அவன் செயல்கள் எதுவுமே தவறான முடிவுகளைத் தருவதில்லை. அவன் கூறியபடி செய்யாத காரியங்கள் குழப்பத்திலும் தோல்வியிலுமே முடியும். அப்போது அவன், "நான் அப்போதே சொன்னேனே, கேட்டீர்களா?" என்று கெக்கலி கொட்டிச் சிரிப்பான்.

வருடங்கள் உருண்டன. விசித்திரபுரியின் வாரிசுக்காகவும் கொஞ்சி மகிழ ஒரு குழந்தைக்காகவும் ஏங்கிய மந்தஹாச மகாராஜாவுக்குக் கீர்த்திவர்மனுக்குப் பிறகு அடுத்தடுத்து இன்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். இரண்டாமவனுக்கு **இன்பவண்ணன்** என்றும், மூன்றாமவனுக்கு **மோகனரங்கன்** என்றும் பெயரிட்டார்கள். கீர்த்திவர்மனின் சகோதரர்களை எல்லோரும் விரும்பினார்கள். ஏனென்றால் அவ்விருவரும் எல்லோரையும் போலச் சராசரி மனிதர்களாக விளங்கினார்கள். அவர்கள் அதிபுத்திசாலிகளல்ல. இன்பவண்ணன் கொழுகொழு என்று வளர்ந்திருந்தான். நல்ல அழகனும்கூட. ஆனால் அத்தனை புத்திசாலி என்று கூற முடியாது. மோகன் வாட்டசாட்டமாக இருந்தான். வாட்போரிலே வல்லவன் தான். ஆனால் சொற்போரிலே தோற்றுப் போவான் அண்ணா கீர்த்திவர்மனிடம்.

கீர்த்திவர்மனுக்கு உற்ற தோழர்களும் யாரும் கிடையாது. அவனுடன் நட்புக் கொள்ள யார் வந்தாலும் உடனே அவனுக்கே உரிய புத்திசாலித்தனம் தலைதூக்கும். 'வேதம், சாஸ்திரம், கலை ஞானம் ஆகியவற்றில் 'உனக்கு அது தெரியுமா, இது தெரியுமா?' என்று குடைவான். அதற்குப் பயந்தே யாரும் அவன் நட்பை நாடுவதில்லை.

மந்தஹாச மகாராஜாவின் சகோதரிக்கு ஒரு மகளும், ராணி ரத்னவதியின் சகோதரருக்கு ஒரு மகளும் இருந்தார்கள். அந்த இரண்டு இளவரசிகளும் விசித்திரபுரி அரண்மனையிலேயே வளர்ந்து வந்தார்கள். வனப்புமிக்க அவ்விருவரையும் கீர்த்திவர்மனின் தம்பிகளான மோகனரங்கனும் இன்பவண்ணனும் காதலித்து வந்தார்கள். எவ்வளவு அழகான ஜோடிகள் என்று இவர்களைப் பார்த்தவர்கள் மனநிறைவோடு பேசிக் கொள்வார்கள். ஆனால் பாவம், பட்டத்து இளவரசனான கீர்த்திவர்மனைக் காதலிக்க எந்த ராஜகுமாரியுமே இல்லை. அதற்காக அவன் கவலைப்படவும் இல்லை. எல்லோராலும் வெறுக்கப்பட்ட கீர்த்திவர்மனுடைய அளவுக்கு மீறிய அறிவாற்றலினால் அண்டை அயல்நாடுகளுடன் நிலவி வந்த நேசபாவம் குலைந்தது. போரையே விரும்பாதவர் மந்தஹாசர். கீர்த்திவர்மனுடைய குணத்தினால் சில போர்களை நடத்த வேண்டியிருந்தது. கீர்த்திவர்மன் தன் வீரத்தினால் அப்போர்களில் வெற்றி தேடித் தந்தாலும் போரை விரும்பாத விசித்திரபுரி மக்கள் போருக்குக் காரணமான கீர்த்திவர்மனை வெறுக்கலானார்கள். இப்படி எல்லாருக்குமே ஒரு பிரச்னையாகி விட்டான் இளவரசன் கீர்த்திவர்மன். (தொடரும்)



1135. ஆக்டபஸ் என்ற கடல் சிலந்திக்கு எத்தனை ஸ்பரிசக் கருவிகள் (டெண்டகிள்ஸ்) உள்ளன?

1136. பச்சடி மீன் (ஜெல்லி ஃபிஷ்) நீரில் எப்படி நீந்துகிறது?

1137. சந்யாசி நண்டு (Hermit crab) என்று ஒருவகை நண்டு. இதன் உடல் மிக மிருதுவாக இருக்கும். இது தன் வீட்டை எங்கு அமைத்துக் கொள்ளும் தெரியுமா?

1138. எகிப்திலுள்ள அபு ஸிம்பல் யாரால் கட்டப்பட்டது தெரியுமா?

1139. லண்டன் நகரில் 1830-ல் பிறந்த ஒருவர் மைக்ரோஃபோனைக் கண்டுபிடித்தார். அவர் பெயர் என்ன?

1140. இன்றைய விசைத் தறியின் தந்தை எனப்படுபவர் எட்மண்ட் கார்ட்ரைட். முதன் முதலில் விசைத் தறியைக் கண்டவர் இவர்தான். இவர் என்ன தொழில் செய்து வந்தார் தெரியுமா?

1141. ஜார்ஜ் ஸ்டீபன்ஸன் 1814ல் கில்லிங்வொர்த் நிலக்கரிச் சுரங்கத்துக்காக உருவாக்கிக் கொடுத்த நீராவி யந்திரத்தின் பெயர் தெரியுமா?

1142. உஷ்ணத்தினால் ஜ்வலிக்கக் கூடிய மின்சார பல்புகளைக் கண்டு பிடித்தவர் யார்?

1143. மெக்ஸிகோ நாட்டில் 1968ல் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் குத்துச் சண்டையில் முதன்மையாக வந்து தங்கப் பதக்கம் பெற்ற குத்துச் சண்டை வீரர் யார்? எந்த நாட்டவர்?

1144. உலக ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தை இதுவரை எந்த பிரிட்டிஷ் பிரஜையும் பெற்றதில்லே. இது சரியா? தவறு?

1145. ஹெவி வெயிட் குத்துச் சண்டை சாம்பியன் பட்டத்தைப் பல வருஷங்கள் வகித்து வந்தவர் ஒருவர். அவர் பெயர் தெரியுமா?

1146. 'மோனு லிஸா' என்ற மோகனச் சிரிப்பு மங்கையைத் தீட்டிய ஓவியர் யார் தெரியுமா?

1147. பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிஸபெத்தின் மகுடாபிஷேகம் நடைபெற்ற தேதி என்ன தெரியுமா?

1148. ராணி எலிஸபெத்தின் குடும்பப் பெயர் என்ன?

1149. இளவரசன் சார்லஸ் வேல்ஸ் இளவரசராக அறிவிக்கப்பட்டது எப்போது?

1150. ராணி எலிஸபெத் பிலிப் கோமகன் இவர்களின் கடைக் குட்டியின் பெயர் என்ன?

1151. ராணியின் தாயார் எங்கு பிறந்தவர் தெரியுமா?

1152. ராணியினுடைய தகப்பனுர் யார்?

1153. தகப்பனுர் இறந்த செய்தியையும் தாம் ராணியானதையும் எலிஸபெத் ராணி எங்கிருந்தபோது அறிந்தார்?

1154. எலிஸபெத் ராணியார் இந்தியாவுக்கு விஜயம் செய்தது எந்த வருஷம் என்று தெரியுமா?

1155. பிரிட்டனில் ஒரு பறவை இருக்கிறது. இது மேலே கிளம்பும் போது செங்குத்தாக நேராகப் போகும். அப்போதும் பாடும். வானத்தில் பறக்கும்போதும் பாடும். கீழே இறங்கும் போதும் பாடும். இப்பறவையின் பெயர் தெரியுமா?

1156. நத்தை, மண்புழு இவைகளை விரும்பி உண்ணும் ஒரு பாடும் பறவை; நத்தையின் உள்ளே இருக்கும் பூச்சியை எப்படி வெளியேற்றி உண்ணுகிறது என்று தெரியுமா?

1135. எட்டு. 1136. நீரை உள்ளுக்கு உறிஞ்சி மறுபடியும் உமிழ்வதன் மூலம். இந்தத் தொடர்ந்த சலனம் அதன் கிண்ணம் போன்ற மேல் பாகத்தைத் துருத்தி போல் இயக்கச் செய்து நகர வைக்கிறது. 1137. காலியான கிளிஞ்சல், சிப்பி ஆகியவைகளின் உள்ளே. 1138. இரண்டாம் ரமேசஸ் என்ற மன்னரால். 1139. டேவிட் எட்வர்டு ஹக்ஸ். 1140 கிறிஸ்துவ மதப் பிரசாரகராக. 1141. ‘மிலார்டு’ என்று பெயர். 1142. சர் ஜே. டபிள்யூ. ஸ்வான் என்பவர். 1143. பிரிட்டனைச் சேர்ந்த கிரிஸ் ஃபின்னிகன் (Chris Finnegan) என்பவர். 1144. சரி. 1145. ஜோ லூயி. 1146. லியோனார்டோ டாவின்ஸி. 1147. ஜூன் மாதம் 3-ம் தேதி, 1953ம் ஆண்டு. 1148. வின்ட்ஸர். 1149. 1970ல். 1150. எட்வர்டு. 1151. ஹெர்ட் போர்ட்ஷையரிலுள்ள செயின்ட் பால்ஸ் வால்டன்பரியில். 1152. மன்னர் ஆறாம் ஜார்ஜ். 1153. கென்யாவிலிருந்தபோது. 1154. 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில். 1155. ஸ்கைலார்க் என்ற பறவை. 1156. நத்தைக் கூட்டைக் கொண்டு போய் ஒரு கல்லில் தேங்காய் உடைப்பது போல் மோதி உடைக்கிறது. நத்தைக் கூடு உடைந்து பூச்சி வெளிப்பட அதை உண்டு மகிழ்கிறது.



"ரெக்ஸ் பேகிங் பவுடர்

உபயோகித்து, மென்மையாக சுவைபடத் தயாரிக்கப்பட்ட கேக்குகளை என் தேநீர் விருந்துகளில் அனைவருமே விரும்புகின்றனர்"



என்கிறார் திருமதி சுலோசனா ராவ்,
'ஸ்ரீ நிவாஸ்', 95, மர்ராட்பள்ளி, சிகந்தராபாத், ஆந்திர பிரதேஷ்.

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு – பெற்ற
பக்குவ முறை

முட்டை கலவாத சாக்கலேட் கேக்

தயாரிக்க உதவுவது
ரெக்ஸ்
பேகிங் பவுடர்



கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதி மென்மையாகத் தயாரிக்க மிகவும் உதவுகிறது, ரெக்ஸ் பேகிங் பவுடர். சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது. அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டிருப்பதால், பேகிங் பவுடர்களில் மிகவும் சிறந்தது ரெக்ஸ் பேகிங் பவுடர்.

பக்குவ முறை:

2 கோப்பை மைதா
3 தேக்கரண்டி (தலைதட்டிய அளவு) ரெக்ஸ் பேகிங் பவுடர்.
1 கோப்பை சர்க்கரை
½ கோப்பை வெண்ணை
1 கோப்பை பால்
4 மேசைக்கரண்டி (தலைதட்டிய அளவு) கோக்கோ.
¼ தேக்கரண்டி உப்பு.
1 தேக்கரண்டி வனில்லா எஸ்ஸென்ஸ்.
½ கோப்பை துருவிய தேங்காய்.
½ கோப்பை பொடியாக நறுக்கிய அக்ரோட்டு.

1. மைதா, உப்பு மற்றும் ரெக்ஸ் பேகிங் பவுடரை ஒன்றுகச் சேர்த்து சலித்து எடுக்கவும். வெண்ணையையும் சர்க்கரையையும் விழுதுபோல் ஆக்கவும். கோக்கோவை சூடான சிறிது பாலுடன் கலந்து; விழுதாக்கிய வெண்ணை-சர்க்கரையுடன் சேர்க்கவும். நன்றாகக் கிளறவும்.
2. துருவிய தேங்காயை ஒரு தேக்கரண்டி நெய்யில் பொன்னிறமாகும் வரை வறுத்து எடுக்கவும். தயாரிக்கப்பட்டுள்ள மைதா, பேகிங் பவுடர், வெண்ணை முதலிய கலவையுடன் தேங்காயை சேர்க்கவும். நன்றாகக் கிளறவும்.
3. அத்துடன் ¼ கோப்பை நறுக்கிய அக்ரோட்டையும் வனில்லா எஸ்ஸென்ஸையும் சேர்க்கவும். நன்றாகக் கலக்கவும். அதை நெய் தடவிய சிறு அச்சுகளில் ஊற்றவும். மிஞ்சியுள்ள அக்ரோட்டால் அதை அலங்கரிக்கவும். அடுப்பில் வைத்து 12-15 நிமிடங்கள் வரை வாட்டவும்.


OBM—1049 TM

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க
உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ,
(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க், பம்பாய் 400001

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

இப்பொழுது! யுகோபாங்க் உங்கள் டிபாஸிட்டுகளை கிட்டத்தட்ட **மும்மடங்கு** ஆக்குகின்றது



நீங்கள் யுகோபாங்க் டிபாஸிட் ஸர்டிபிகேட் திட்டத்தில் பணம் போட்டு வைத்தால்!

இத்திட்டப்படி ரூ. 5000 டிபாஸிட் செய்கிறீர்கள் என்றால், அத்தொகை சரியாக 15 ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்று மடங்கான ரூ. 15,000 ஆகப் பெருகிவிடுகிறது நீங்கள் முதலில் போட்ட பணத்திற்கு இது எவ்வளவு கணிசமான தொகை! இத்திட்டம், குறைந்த தொகை ரூ 100 லிருந்து தொடங்கி அதற்கு மேல் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் போகலாம்.

தாங்களே தங்களுக்கு உதவ
மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-20 TAM

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேக், மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி; மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு

டாக்டர் ததாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய்-400001



